# வளர்தமிழ்



8

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

நூலகம்

<u>முக்கிய அறிவித்தல்.</u>

இப்புத்தகம் உங்களுடைய சொத்தாகும். இதில் கீறுதல், கிழித்தல், வெட்டுதல், மடித்தல், அழுக்குப்படியவிடுதல், போன்ற ஊறுகளைச் செய்ய வேண்டாம் என அன்புடன் வேண்டுகின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் இருப்பின் உடன் ஆசிரிய நூலகருக்குத் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்லநிலையில் இருந்ததாகக்கருதி அதற்காக விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

-ஆசிரிய நூலகர்-

# வளர்தமிழ் 8

## தமிழ்ப் பயிற்சிப் புத்தகம்

151

**எஸ் வசந்தகுமாரி**
பி எஸ் சீனியர் மேனிலைப் பள்ளி
சென்னை

JIK OPAY SARAVANA BAVANANTHA VIS.
DATE__________
LIBRARY

*முதன்மை ஆலோசகர்*
**இ அண்ணாமலை**
இயக்குநர் (ஓய்வு)
இந்திய மொழிகளின்
நடுவண் நிறுவனம்
மைசூர்

*ஆலோசகர்*
**கி தோத்தாத்திரி**
வித்யா மந்திர் சீனியர் மேனிலைப் பள்ளி
சென்னை

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

ஓரியன்ட் லாங்மன்

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

மேலட்டை: ஃபானி தெத்தாலி/பானு பாஸ்கர்
வடிவமைப்பு: ரங்கஸ்ரீ ஸ்ரீனிவாஸ்
உள் ஓவியங்கள்: சசி

வளர்தமிழ் 8
தமிழ்ப் பயிற்சிப் புத்தகம்

---

© ஓரியன்ட் லாங்மன் லிமிடெட் 1997

முதல் பதிப்பு 1997

ISBN 81 250 0835 7

**ஓரியன்ட் லாங்மன் லிமிடெட்**

*பதிவு அலுவலகம்*
3-6-272 ஹிமாயத் நகர்
ஹைதராபாத் 500 029 (ஆ.பி.)

*மற்ற அலுவலகங்கள்*
கல்கத்தா சென்னை மும்பை புது தில்லி

எர்ணாகுளம் குவஹாத்தி பாட்னா புவனேஷ்வர்
பெங்களூர் லக்னௌ ஹைதராபாத் ஜெய்பூர்

*லேசர் அச்சுக்கோர்வை*
ரிப்ளிக்கா
சென்னை 600 018

*ஆப்செட்டில் அச்சிட்டோர்*
கிரிஸ்டல் ஆப்செட்ஸ்
சென்னை 600 049

*வெளியிட்டோர்*
ஓரியன்ட் லாங்மன் லிட்
160 அண்ணா சாலை சென்னை 600 002

# ஆசிரியருக்கு

தொடக்கநிலை மொழிபயிலுவோர் படிக்கும் திறன் குறைந்தவர்களாகவும், எளிதில் புரிந்துகொண்டு செயல்படும் திறனற்றவர்களாகவும், திட்டமிடப்படாத எழுத்துப்பிரயோக முறைகளைக் கையாளுபவராகவும் காணப்படுவதை ஆசிரியர்கள் உணரலாம்.

வளர்தமிழ் மொழிப் புலமையின் அடிப்படைத் தேவைகளான அறியும்திறன், அறிந்தவற்றை நினைவிலிருத்தும் ஆற்றல், பலவகையான சொற்களின் உச்சரிப்பு முறைகளில் ஏற்படும் மாறுதல்களைப் பிரித்துணரும் புலமை (Identification–Recall–Discrimination) போன்ற திறன்களை வளர்ப்பதாக அமையும்.

மாணவர்கள் தமிழ் மொழியைப் படிக்கும் போதும் எழுதும் போதும் பேசும் போதும் பொதுவாக வெளிப்படுத்தும் பிழைகளின் அடிப்படையில் இப்புத்தக வரிசையின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.


ஒன்று முதல் எட்டு வரையிலான இப்பயிற்சிப் புத்தகங்களின் இலக்கணப்பகுதி இலக்கிய வழக்கிலிருந்து மாறுபட்டு தற்கால பேச்சு வழக்கின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வகுப்பின் பாட நிலைக்கு ஏற்றவாறும், மாணவர்களின் அறியும் திறனுக்கு ஏற்ற விதத்திலும் இந்த இலக்கணப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. அகராதியின் பயன்பாடு குறித்தும் மாணவர்கள் இப்புத்தகங்களின் மூலம் அறிந்து கொள்கிறார்கள்.

பெருவாரியான எழுத்துப் பயிற்சிகள் இரட்டையராகச் சேர்ந்து மாணவர்கள் செயலாற்றும் விதமாகவும், குழுக்களாகப் பிரிந்து பயிலும் விதமாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. பயிற்சிகளின் தொடக்கத்திலுள்ள பயிற்சிக் குறியீடுகள் மாணவர்கள் அந்தப் பிரிவில் பயிலப் போகும் பாடங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். பேச்சு வழக்கிலுள்ள தமிழ் மொழிப் பயன்பாட்டை வெளிப்படுத்துவதே இப்புத்தகங்களின் முயற்சி. இதன் காரணமாக இலக்கிய வழக்குச் சொற்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளன.

# பயிற்சிக் குறியீட்டு விளக்கம்


அகராதி உருவாக்கம்



அறியும் திறன்


இலக்கணம்


உச்சரிப்பு



உரையாடல் பயிற்சி


கட்டுரை


சிந்தனைப் பயிற்சி


சொல் பெருக்கம்


சொல்லுருவாக்கம்


நிறுத்தக் குறிகள்


பயிற்சிக் கட்டமைப்பு


# உள்ளடக்கம்


1. அண்டங்காக்கை *1*
ஆலாபனை *2*
மும்பையில் மழை *4*
2. அடங்காத் தாகம் *6*
மல்லிகாவின் பாட்டு *7*
என்னைப் பிரிக்க முடியுமா? *10*
3. கற்பனையில்... *12*
நூற்றுக்கு நூறு *13*
உடல்நலம் எப்படி? *15*
4. அப்படியே உட்கார்; மூக்கில் ஜவ்வு! *17*
கழுகும் காக்கையும் *19*
தன் வினை - பிற வினை; மக்கள் கூட்டம்! *21*
5. திருடன் பிடிபட்டான்; உனது மதிப்பெண் *23*
6. அகத்தின் அழகு *26*
கட்டட வேலை *27*
செந்நீர் சிந்திய சிங்கங்கள் *28*
7. இலக்கிய மன்றம் *29*
ரமீலாவும் கணக்கும் *31*
ரேவதியின் வருத்தம் *32*
8. நட்சத்திர மீனின் அங்கலாய்ப்பு; நேட்டன் யாஹூ *35*
ஜன்னலின் நடுக்கம் *37*
9. வீடில்லாத முடியாதவர்கள் *39*
விண்ணில் விளையாடலாம் வா! *40*
கிழிக்காதே! பாப்பா கிழிக்காதே! *41*
ஒற்றுமையில் வேற்றுமை *43*
பூங்காவிலிருந்து... *44*
10. தண்ணீரின் கலக்கம் *46*
கனியின் சுவை *48*
11. ஏனிந்தச் சிரிப்பு!; நாட்டு முன்னேற்றம் *51*
ஆகு பெயர் *53*
சமயோசிதம் *54*
12. ஜகதீஸ் சந்திரபோஸ் *57*
வழக்கு *58*

13. அறிவியல் முன்னோடி 59
காலால் வந்த வினை 60
பால் பண்ணைக்குப் போகலாமா 62
14. பணகேசரி 65
மெல்வில் டூயி 66
15. குதிரைக்குப் போட்ட தூண்டில் 68
16. இம்மான்! பொன்மான்! 71
கிளிப்பிள்ளை 73
17. ராஜாவும் நூறு ரூபாயும் 74
சேமிப்பே சிறந்த பாதுகாப்பு 75
சாலைக் குறியீடுகள் 76
18. திருப்புத் தேர்வு 77
19. யாப்பு – அணி 80

# 1

## அண்டங்காக்கை




பண்டைக் காலத்தில் புலவர்கள் நகைச்சுவை உணர்வு மிகுந்தவர்களாகவும் அரசர்க்கு இணையாகப் பேசும் தகுதிபெற்றவர்களாகவும் இருந்தனர். ஒரு மன்னன் ஒரு புலவரைப் பார்த்து அவர் சற்று கருப்பு நிறமாக இருந்ததால் ''வருக! வருக! அண்டங்காக்கைக்குப் பிறந்தவரே'' என்று ஏளனமாகக் கூறினான். புலவரோ இதற்கு சளைக்காமல் ''மன்னா நான் அண்டங்காக்கைக்குப் பிறக்கவில்லை; தாங்கள்தான் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர்'' என்று தைரியமாகக் கூறினார். மன்னன் புலவர் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுற்றான். புலவர் நிதானமாக ''ஆமாம் மன்னா! தாங்கள் தான் இந்த அண்டத்தை, உலகத்தைக் காக்கப் பிறந்தீர்''* என்று சமயோசிதமாகக் கூறினார். சபையே நகைப்பில் மூழ்கியது. மன்னனும் கூடத்தான்.

---

* அண்டம் – உலகம்; காக்க – காப்பாற்ற.

**I. மேலே உள்ள கதையைப் படித்தாயா? இனி கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளி.**

1. அரசர் புலவரைப் பார்த்து என்ன கூறினார்?
2. புலவர் அரசரின் கேள்வியைக் கேட்டு சளைத்தாரா?
3. புலவரின் பதில் யாது?
4. உனக்கு இதுபோன்ற கதைகள் ஏதாவது தெரியுமா?
5. இந்தக் கதைக்கு உனக்குத் தோன்றும் தலைப்புகள் எவை?



## ஆலாபனை








**தெரிந்துகொள்:**

பாடகர் ஆலாபனை செய்யும் போது எழுத்துகளை நீட்டிப் பாடுவதைக் கேட்டிருக்கிறாயா?

பொருள்களை விற்பவர் எவ்வாறு விற்பார்?

1. காய்கறி விற்பவர்
2. ஐஸ் விற்பவர்
3. உப்பு விற்பவர்
4. ரயில் நிலையத்தில் தின்பண்டம் விற்பவர்

இவர்கள் எழுத்துகளை நீட்டி உச்சரிப்பார்களா? இல்லையா?


அப்போது எழுத்துக்களின் மாத்திரை நீளுமா? இல்லையா?

*இவ்வாறு எழுத்துகள் தம் மாத்திரையில் நீண்டு ஒலித்தால் அளபெடை எனப்படும்.*

*உயிர் எழுத்து நீண்டால் உயிரளபெடை*
*மெய் எழுத்து நீண்டால் ஒற்றளபெடை*

அளபெடை < உயிரளபெடை / ஒற்றளபெடை

உயிரளபெடை




*1. செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறைந்தால் சில வேளைகளில் உயிர் எழுத்து நீண்டு ஒலிக்கலாம். ஆனால் பொருள் மாறக் கூடாது. இது *செய்யுளிசை அளபெடை.*

**உதாரணம்**

ஓதல் நன்று > ஓஒதல் நன்று

உயிர் எழுத்து இனிய இசைக்காக நீளுமேயானால் *இன்னிசை அளபெடை.*

கொடுப்பதும்    கொடுப்பதூஉம்

உயிர் எழுத்து அளவில் நீண்டு ஒலிக்கும்போது பொருள் மாறினால் *சொல்லிசை அளபெடை.*

| | |
|---|---|
| நசை | நசைஇ |
| விருப்பம் | விரும்பி |
| (தொழிற்பெயர்) | (வினை) |

பெயர்வினையானால் சொல்லிசை அளபெடை.

* குறிப்பு : தற்காலத் தமிழ் பேச்சு வழக்கில் இவை இல்லை.

**II. பின்வரும் சொற்களில் அளபெடையை மட்டும் வட்டமிட்டுக் காட்டு.**

1. கெடுப்பது
2. நசைஇ
3. ஆஅதல்
4. எடுப்பதூஉம்
5. அதனினூஉங்கு
6. உண்பது
7. உண்பதூஉம்
8. நலன்



## *மும்பையில் மழை*

**III. 'இருந்தால்', 'இல்லாவிட்டால்' உபயோகித்து நிரப்பு.**







**உதாரணம்**

> ரித்தேஷ் நேற்று காவனூரில் இருந்தால் சூரிய கிரகணம் பார்த்து இருப்பான்.

1. இன்று மகாத்மா காந்தி நம்முடன் ____________ நாட்டின் நலம் பெருகி இருக்கும்.
2. நீ நாளை டெல்லியில் ____________ நேர்முகத் தேர்விற்குச் சென்றிருக்கலாம்.
3. நேற்று மட்டும் நீ ____________ எங்கள்பாடு திண்டாட்டம் தான்.
4. மும்பையில் மழை ____________ கிரிக்கெட் போட்டி நடைபெற வாய்ப்பு உள்ளது.
5. பாட்சாவுக்கு வயிற்றுவலி ____________ நீதிமன்றத்திற்கு வந்திருப்பார்.
6. கிரீஷிடம் கர்வம் ____________ நல்லவன் என்று பெயர் எடுத்திருப்பான்.
7. தண்ணீர் ____________ பயிர்வாடிவிடும்.

# 2

## அடங்காத் தாகம்



சி.வி. இராமன் கல்கத்தாவில் மாநிலக் கணக்காய்வுத் துறைத் தலைவராக அப்போது வேலையிலிருந்தார். ஒரு நாள் டிராம் வண்டியில் சென்று கொண்டிருந்த போது இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகம் என்ற விளம்பரப்பலகை அவரது கண்ணில் பட்டது.

உள்ளத்தின் ஆழத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் குடிகொண்டிருந்த அவருக்கு இப்பலகை கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல இருந்தது.

ஓய்வு நேரங்களிளெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆராய்ச்சி செய்வதற்கான வசதிவாய்ப்புகள் மிகக் குறைவான அக்காலத்திலேயே தரமான ஆய்வு முடிவுகளைக் கண்டறிய முடியும் என்று அவர் நிரூபித்துக்காட்டினார். தன் ஆராய்ச்சி முடிவுகளைக் கட்டுரைகளாக எழுதி மேல்நாட்டு ஆராய்ச்சி இதழ்களுக்கு அனுப்பினார்.

அவரது 'இராமன் விளைவு' என்றறியப்படும் வானவியல் குறித்தான ஆராய்ச்சி முடிவுகள் இன்று நடத்தப்படும் பலவகையான ஆய்வுப் பணிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது.

**I. மேலேயுள்ள உதாரணத்தில் அறிவியல் அறிஞர் இராமனின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்போல கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திப் பத்திகளாகப் பிரித்து கட்டுரை ஒன்று எழுது.**

*வள்ளல் பாண்டித்துரை — மதுரையில் தங்கியிருந்த வேளை — சொற்பொழிவுக்கான நூல்கள் கிடைக்காத நிலை — வருத்தம் — நான்காம் தமிழ்ச்சங்கம் — பெருமளவில் பண்டைய இலக்கியங்கள் அச்சேறுதல் — தமிழ் வளர்ச்சி —*

## *மல்லிகாவின் பாட்டு*

**II. அ. பின்வரும் சொற்றொடர்களை இணை.**








*1. மல்லிகா நன்றாகப் பாடினாள்; மல்லிகா பாராட்டுப் பெற்றாள்; மல்லிகா பரிசும் வென்றாள்.*

*2. சுமேஷ் நன்றாகப் பயிற்சி செய்தான்; சுமேஷ் பல போட்டிகளில் வென்றான்; சுமேஷ் உலகப் புகழ் பெற்றான்.*

*3. நிக்கில் பந்தயத்தில் பங்கு கொண்டான்; நிக்கில் வேகமாக ஓடினான்; நிக்கில் இரண்டாம் இடத்தைப் பெற்றான்.*

**ஆ. பின்வரும் சொற்றொடர்களைத் தனித்தனியே எழுது.**



1. கபாலி சைக்கிளில் ஏறி வேகமாகச் சென்று மயிரிழையில் பஸ்ஸில் அடிபடாமல் தப்பினான்.


2. அஷ்வத் ஆசிரியரிடம் எதிர்த்துப் பேசி தன் மதிப்பை இழந்ததோடு, தண்டனையையும் பெற்றான்.

3. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்று ஆயர்பாடியில் தங்கினர்.

**தெரிந்துகொள்:**



ரமா நாயுடன் விளையாடினாள்.




ரஷீத் தலைகீழாகத் தொங்கினான்.

இவற்றைத் தனி வாக்கியங்கள் எனலாம்.

இனி இச்செயல்களின் தொடர்ச்சியைப் பார்க்கலாம்.

1. ரமா நாயுடன் விளையாடினாள்; கடிபட்டாள்; மருத்துவரிடம் ஓடினாள்.
2. ரஷீத் தலைகீழாகத் தொங்கினான்; விழுந்தான்; தடவிக் கொண்டே எழுந்தான்.

இவைகளின் எழுவாய் ஒன்றே. ஆனால் தொடர்ந்து வரும் பயனிலைகள் பல. இவை தொடர் வாக்கியங்கள் எனப்படும்.



இந்தப் பேருந்து வேகமாக ஓடுகிறது.



பறவை பறக்கிறது.



நேரு ரோஜாப் பூ வைத்திருக்கிறார்.

இவை ஒரு எழுவாய் – ஒரு பயனிலையோடு முடிவடைந்து உள்ளன. கீழே உள்ள படங்களைப் பார்.



கடிதம் வந்தது.



*புயற்காற்று அடிக்கிறது. மழையும் பெய்கிறது.*



*நாய் ஓடிக்கொண்டிருக்கிறது.*

இவற்றில் எந்தெந்தச் சொற்களை வைத்துக் காலத்தை அறிய முடிகிறது?

1. வந்தது. 2. பெய்கிறது. 3. ஓடுகிறது.

இச்சொற்கள் எழுவாயின் தொழிலைக் குறிப்பதனால் இவை *வினைச் சொற்கள்.*



## *என்னைப் பிரிக்க முடியுமா?*

உண்பான் இச்சொல்லைப் பிரிக்க முடியுமா?

| உண்டான் | உண்கிறான் | உண்பான் |
|---|---|---|
| ↕ | ↕ | ↕ |
| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| (உண்+ட்+ஆன்) | (உண்+கிறு+ஆன்) | (உண்+ப்+ஆன்) |

'உண்' என்பது - செயலை உணர்த்தும்.

இறுதியில் வந்த 'ஆன்' - ஆண்பாலை உணர்த்தும்.

இடையில் உள்ளவை - இடைநிலைகள். இவை காலத்தை உணர்த்தும்.



III. பின்வரும் சொற்களில் உள்ள இடைநிலையைக் கண்டுபிடி.

1. புகழ்ந்தனர் 2. எண்ணினாள்

3. செய்தார் 4. விழுந்தாள்

5. செய்தது

**தெரிந்துகொள் :**

இறந்தகால இடைநிலை

| த் | ட் | ற் | இன் |

* நிகழ்கால இடைநிலை

| கிறு | கின்று | ஆநின்று |

* தற்கால வழக்கில் இல்லை.

எதிர்கால இடைநிலை

| ப் | வ் |

# 3

## கற்பனையில்...

I. பின்வரும் படத்தைக் கண்டதும் ஏதாவது எழுத வேண்டும் என்று தோன்றவில்லை உனக்கு? அது கதையாகவோ சிறிய நிகழ்ச்சியாகவோ இருக்கலாம். உனது கற்பனையைச் சேர்த்து நூறு சொற்களில் எழுது.





**உதாரணம்**

நேர்கூற்று :

1. கண்ணன் ''நான் கெட்டிக்காரன்'' என்று சொன்னான்.

கண்ணன் தான் கெட்டிக்காரன் என்று சொன்னான்.

**உதாரணம்**

2. கண்ணன் நீ கெட்டிக்காரன் என்று மோகனைச் சொன்னான்.

கண்ணன் மோகன் கெட்டிக்காரன் என்று சொன்னான்.

3. கண்ணன் ''மோகன் கெட்டிக்காரன்'' என்று என்னைச் சொன்னான்.

கண்ணன் 'நீ கெட்டிக்காரன்' என்று சொன்னான்.

**உதாரணம்**



அயற்கூற்று :

கண்ணன் 'நீ கூடவா' என்று சொன்னான்.

கண்ணன் என்னைக் கூடவரச் சொன்னான்.

கண்ணன் 'நீ கூட வராதே' என்று சொன்னான்.

கண்ணன் என்னைக் கூடவர வேண்டாம் என்று சொன்னான்.

நேர்கூற்று : ஒருவர் கூறியதை அப்படியே கேட்பவருக்குக் கூறுவது.

அயற்கூற்று : ஒருவர் கூறியதைக் கூறிய நிலையிலிருந்து மாற்றிக் கேட்பவருக்குப் பொருத்திக் கூறுவது.

நேர்கூற்றிலிருந்து அயற்கூற்றாக மாற்றும் போது கவனிக்க வேண்டியவை:

| நேர்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| நான் | தான் |
| நாம் | தாங்கள் |
| நாங்கள் | அவர்கள் |
| நீ | அவன்/அவர்/அவள் |
| நீங்கள் | அவர்கள் |
| என் | அவனுடைய / அவளுடைய |
| எனக்கு | அவனுக்கு / அவளுக்கு |
| எங்களுக்கு | அவர்களுக்கு |
| இது, இவை, இங்கு | அது, அவை, அங்கு |
| இப்போது | அப்போது |
| நேற்று | முதல்நாள் |
| நாளை | மறு நாள் |

**II. *பின்வரும் நேர்கூற்றினை அயற்கூற்றாக்கு.***


1. *''இசையின் மூலம் செடிகள் வளரும்'' என்று கோகுல் சொன்னான்.*



2. *ரோஷனா, ''நான் இன்று கம்ப்யூட்டர் வகுப்பிற்குச் சென்றேன்'' என்று ரோஹித்திடம் கூறினாள்.*



3. கமலேஷ் ராஜேஷிடம், ''நீ ஏன் உடற்பயிற்சி வகுப்பிற்கு வரவில்லை?'' என்று கேட்டான்.



4. வேதா ரூபிணியிடம், ''எங்கள் பள்ளியில் பயிற்சி முகாம் அமைத்துள்ளனர். உங்கள் பள்ளியிலும் முகாம் நடைபெறுகிறதா?'' என்று கேட்டாள்.





## உடல்நலம் எப்படி?

**III. 'இல்லையென்றால்', 'ஏனென்றால்', 'அப்படியென்றால்', 'உண்டென்றால்', 'எப்படியென்றால்', 'என்னவென்றால்' கொண்டு கீழேயுள்ள வாக்கியங்களை நிறைவு செய்.**



1. சுஜேஷ் இன்று பள்ளிக்கு வரமாட்டான். ________________ அவனுக்கு உடல்நலம் சரியில்லை.



2. '' ________________ நீ நாளை நூலகம் செல்லமாட்டாயா?''




3. ''கண்ணா நீ நாளை தொழிற்கூடம் வந்துவிடு. ______________ நானே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டி வரும்.''




4. ''மாணவர்களே! ஆசிரியராகிய நான் கூறுவது ______________ நீங்கள் அனைவரும் நன்கு படிக்க வேண்டும்.''

# 4



*அப்படியே உட்கார்!*




**I. மேலே ஒரு படம் கொடுக்கப்பட்டுள்ளது. படத்திலுள்ள இருவரும் என்ன பேசியிருப்பார்கள் என்று கற்பனை செய்து எழுது.**



*மூக்கில் ஜவ்வு!*

**II. பின்வரும் பகுதியைப் படி. தொடர்ந்து அதில் காணப்படும் பெயர், வினை, இடைச் சொற்களைப் பட்டியல்படுத்து.**



பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு, அதாவது மனித குலத்திற்கு நீண்ட நகங்களும், கோரைப் பற்களும் இருந்தனவாம். இன்று இவை அளவில் குறைந்து விட்டன. வெளியில் நீட்டிக்கொண்டு இருக்கும் கோரைப்பல் தற்போது இல்லவே இல்லை. ஒரு வேளை வால் கூட இப்படி இருந்து பின்னால் மறைந்து போயிருக்கலாம்.

* உரிச்சொல் பேச்சு வழக்கில் இல்லை.

இன்னும் ஒரு பத்து லட்சம் வருடங்களுக்குப் பின்னர் மனிதன் எப்படி இருப்பான்? சற்று முன்னோக்கிப் பயணத்தைத் தொடர்வோம்.

நமக்குச் சுண்டு விரலும், மோதிரவிரலும் பெரும்பாலும் குறைவாகப் பயன்படுகின்றன. அவை இரண்டும் அளவில் குறைந்து விடலாம். மோதிரத்தை ஆள்காட்டி விரலிலேயே போட்டுக் கொள்வது பொருத்தமாகத் தோன்றும்.

கம்ப்யூட்டர்களை இயக்கி இயக்கி கைகளின் விரல்கள் மேலும் கூர்மையான உணர்ச்சியைப் பெற்று விடலாம்.

அதிகமாகச் சிந்தித்துச் சிந்தித்து மனிதனின் மூளை பெரியதாகலாம். உணவு பழக்கங்களில் நாகரீக உணர்வு கலந்தபின் பற்களுக்கு மெல்லும் வேலை குறைந்து கோரைப் பற்கள், கடைவாய்ப்பற்கள் வளராமல் போய்விடலாம்.

மாசுபடிந்த காற்றை சுவாசிப்பதால், புதுமையான ஜவ்வு மூக்கிற்குள் வளர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தரையில் உட்காருவது என்பதே நாளடைவில் மறந்து போகலாம். எனவே அதற்கேற்றாற்போல உடல் வளைய முடியாதபடி ஆகலாம். வாய்விட்டு சிரிப்பதுகூட நின்று விடலாம். எனவே மெல்லப் பேசி மெல்லச் சிரிப்பதனால் வாயும் குறுகிவிடலாம்.

எது எப்படியானாலும் மனிதனின் ஆசை மட்டும் மாறாமல் அப்படியே இருக்கும்!

| பெயர்ச் சொல் | வினைச்சொல் | இடைச்சொல் |
|---|---|---|
| | | |

## கழுகும் காக்கையும்

காட்டு வயலில் செம்மறி
ஆட்டு மந்தை ஒன்றுமே
கூட்டமாகத் திரிந்தது
குறையில்லாமல் மேய்ந்தது



வட்டமிட்டு அவ்விடம்
வந்த கழுகு மந்தையில்
குட்டி ஆடு ஒன்றினைக்
கூர்ந்து பார்க்கலானது

பார்த்துக் கொண்டே வேகமாய்
பாய்ந்தே அதனைக் கால்களால்
சேர்த்து நன்கு தூக்கியே
சிறகடித்துப் பறந்தது



'கழுகு பெரிய ஆட்டினைக்
கவர்ந்து செல்லு கின்றது
கொழுத்த பெரிய ஆட்டையே
கொண்டு நானும் செல்லுவேன்'

என்றே எண்ணிக் காகமும்
எழுந்து பறந்து சென்றது
நன்கு கொழுத்த ஆட்டினை
நாடி முதுகில் அமர்ந்தது

முறுக்கி முறுக்கிக் கால்களால்
முதுகிலுள்ள மயிர்களை
இறுக்கிப் பிடித்துத் தூக்கவே
எத்தனங்கள் செய்தது



கனம் மிகுந்த ஆட்டினைக்
காகம் தூக்க முடியுமோ?
மனத்திலிருந்த ஆசையும்
மாய்ந்து மறையலானது

ஆசை மறைந்த தாயினும்
ஐயோ! கால்கள் சிக்கின
வீசிச் சிறகை அடித்தது;
வீண் தான் தப்ப முடியுமோ?

மாட்டிக் கொண்டு தவித்திடும்
மடமை மிக்க காக்கையை
ஆட்டுக்காரன் பார்த்தனன்
ஆவலோடு நெருங்கினன்;

பறக்க வழியும் இன்றியே
பரிதவிக்கும் காக்கையை
இறக்கை தன்னை வெட்டியே
எடுத்து வீடு சென்றனன்;

''அப்பா இதுபோல் பறவையை
நானும் பார்த்ததில்லையே!
எப்போ தப்பா பிடித்தனை?
என்ன பறவை சொல்லுவாய்!''

என்று கேட்ட மகனிடம்
இடையன் கூறலாயினன்:
''அன்பு மிக்க மைந்தனே!
அதிசயம் போல் பார்ப்பதேன்?

கொழுத்த ஆட்டைத் தூக்கியே
கொண்டு செல்லும் ஆசையில்
கழுகு என்று தன்னையே
கருதிக் கெட்ட காக்கைதான்.''





– நன்றி
– குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

**III. மேற்கண்ட பாடலில் வந்துள்ள ஆறுவகைப் பெயர்களையும் பட்டியலிடு.**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## தன் வினை – பிற வினை

சேகர் கார் ஓட்டினான். சேகர் பிரவீணைக் கார்ஓட்ட வைத்தான்.

ஓட்டினான் – தன்வினை
ஓட்டவைத்தான் – பிறவினை

### IV. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| 1. மாருதி மண்ணைக் கொட்டினான். | மாருதி மண்ணைக்___________. |
| 2. ஸ்ரீதர் கண்ணாடியைத் துடைத்தான். | ஸ்ரீதர் கண்ணாடியைத்___________. |

## மக்கள் கூட்டம்!



உடன்பாடு

உதாரணம்


கண்ணன் வேலை செய்தான்.

எதிர்மறை

உதாரணம்

கண்ணன் வேலை செய்ய வில்லை.

**V. கீழேயுள்ள வாக்கியங்களை உடன்பாடு மற்றும் எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுது.**



1. வசுதா மல்லிகை சூடினாள்.

______________________________

2. ஷபிக் விளையாட்டில் வெற்றி பெற்றான்.

______________________________

3. மக்கள் கூட்டமாகச் சென்றனர்.

______________________________

4. கற்காலத்தில் டினோசர் இருந்தது.

______________________________

5. வெண்நாரைகள் பறந்து விட்டன.

______________________________

6. பொருட்காட்சிக்கு அமைச்சர் இன்னும் வந்து சேரவில்லை.

______________________________

# 5

## திருடன் பிடிபட்டான்

**I. 'கண்ணுங் கருத்துமாக', 'கையுங் களவுமாக', 'ஓட்டமும் நடையுமாக' கொண்டு கீழ்காணும் பத்தியைப் பூர்த்தி செய்.**



______ ராதா உள்ளே ஓடி வந்தாள். அதைக் கண்ட சதீஷ் மிரண்டு போனான். ''என்ன விஷயம்?'' என்று கேட்டான். ராதா ''என் கைப்பை திருட்டுப்போய் விட்டது. நல்லவேளை! உடனிருந்தவர்கள் எப்படியோ திருடனை ______ பிடித்துவிட்டனர்'' என்றாள். ''நீ ______ இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா'' என்று அவளைக் கோபித்துக் கொண்டான் சதீஷ்.

## உனது மதிப்பெண்

**II. 'அதிகபட்சம்', 'குறைந்தபட்சம்' கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்பு.**




1. ''மாணவர்களே! நீங்கள் ______ எவ்வளவு மதிப்பெண் வாங்குவீர்கள்?''



2. கமலா ______ நான்கு ஆண்டுகளாவது இத்தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும்.
3. ஆசிரியை ஆவதற்கு ______ பள்ளியிறுதி வகுப்பை முடித்திருக்க வேண்டும்.
4. இந்தப் பசுவிற்கு ______ மூவாயிரம் ரூபாய்தான் தர முடியும்.

## தெரிந்துகொள் :




1. இயல்பாய் அனைவர்க்கும் புரிவது இயற்சொல்.

**உதாரணம்**

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே!

**உதாரணம்**

*வாரணத் தொகுதி கண்டு பல்லவன் பின்வாங்கவில்லை.*

வாரணம் — யானை

2. (கற்றோர்க்கு மட்டுமே புரிவது) *திரி சொல்.*

**உதாரணம்**

கபடிப் போட்டி இன்று மழையால் தடைபட்டது.



3. (*திசைச் சொல்* — கபடி : வேறு திசைகளில் இருந்து (மொழியிலிருந்து) நுழைந்தது.

**உதாரணம்**


*மஹிஷாசுரன் ஒரு அரக்கன்.*




4. வடமொழி எழுத்து இடம் பெற்ற சொல் வடசொல்.

III. கீழேயுள்ள பத்தியைப் படி. பின்னர் அதில் காணப்படும் பலவகைப்பட்ட சொற்களைக் கண்டறிந்து உன் பயிற்சிப் புத்தகத்தில் எழுது.

நாங்கள் எல்லோரும் அந்த இரவு நேரத்தில் நிலவின் ஒளியில் குதூகலித்துக் கொண்டிருந்தோம். பக்கத்தில் மலர்த் தோட்டம். தட்டில் ஜாங்கிரி. வெளியே டென்னிஸ் மைதானம் இருந்தது. எனது தந்தை கேட்டார். ''சரஸ்வதி! டிக்கெட்டை அலமாரியில் வைத்து விட்டாயா?'' நான் பதில் கொடுப்பதற்குள் நான் வளர்க்கும் தத்தை 'ஓ!' என்று பதிலளித்தது.



# 6



## அகத்தின் அழகு

**I. இங்கு உறுப்புகளைக் குறிக்கும் பழமொழிகள் சில கொடுக்கப்பட்டுள்ளன. உறுப்புகளின் பெயர்களைச் சரியாகப் பெட்டிக்குள் எழுதி நிரப்பு.**

**உதாரணம்**

*நுணலும் தன் [வாயால்] கெடும்.*





*1. சிறு துரும்பும் [ ] குத்த உதவும்.*



*2. எறும்பும் தன் [ ] எண் சாண்.*


*3. செவிடன் [ ] சங்கு ஊதுவது.*





*4. [ ] உள்ள பிள்ளை பிழைக்கும்.*

*5. அகத்தின் அழகு [ ] தெரியும்.*





*6. அலை ஓய்ந்து [ ] முழுகவோ?*

## கட்டட வேலை

**II. 'முன்னும் பின்னுமாக', 'இரவும் பகலுமாக', 'எலியும் பூனையுமாக', 'மேலும் கீழுமாக' இவற்றைப் பயன்படுத்திக் கீழுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்.**

1. அரசன் வீதி வலம் வந்தபோது ____________ அரசப் பிரதிநிதிகள் சென்றனர்.






2. ______________ அங்கே கட்டட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

3. ராமுவும், சோமுவும் உடன் பிறந்தவர்கள். எனினும் ________________ எப்போதும் இருப்பார்கள்.





4. 'நான்தான் திருடினேன்' என்று போலீஸில் சரணடைந்த நந்தனைக் காவலர் __________ பார்த்தனர்.



5. இந்தப் புத்தகத்தைத்தான் நிரஞ்ஜன் _______________ படித்துக் கொண்டிருந்தான்.

## *செந்நீர் சிந்திய சிங்கங்கள்*

*''பாரத நாடு பார்க்கெல்லாம் திலகம்;*
*நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்''*



என்று பாடினாரே பாரதி! அவர் தாள் வணங்கி விடுதலைக்குப் பாடுபட்ட வீரமறவர்களைக் குறித்து இங்கு சிந்திப்போமாக!



மெல்ல மெல்ல நம் இந்திய மண்ணை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப் பாடுபட்டனர், தமிழ் நாட்டின் இளஞ்சிங்கங்கள். வெள்ளையர் ஆட்சிக்கு இறுதிமணி அடித்த பெருமை வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உண்டு. வரி கொடுக்க மறுத்து, வீரப்போர் புரிந்து தன் உயிரை விடுதலை வேள்விக்காக ஈந்த மாமனிதன்.

ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி தந்த இன்னொரு சிங்கம். அவ்வூரின் கோட்டையை வலிமையாக்கியவன். சரமாரியாக விழுந்த தடியடிகளைத் தலைமேல் தாங்கிக் கொடியைக் காத்த வீரச்செம்மல் திருப்பூர் குமரன். ஆஷ் துரையை ................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................

**III. இந்தப் பகுதியை உன் ஆசிரியர் உதவியுடன் நிறைவு செய்து பேசிப் பழகு.**

SARAVANA BAVANANTHA
DATE

# 7

## இலக்கிய மன்றம்



**நீலா :** வா கலா!

**கலா :** நீலா! இம்மாதம் இலக்கிய மன்றத்தொடக்க விழா! அதற்கு இப்போது நிகழ்ச்சி நிரல் தயாரிக்கலாமா?

**நீலா :** நிகழ்ச்சி என்று? எப்போது?

**கலா :** இம்மாதம் பதினான்காம் தேதி; மாலை நான்கு மணிக்கு.

**நீலா :** சரி! யார் தலைமை தாங்கப் போகிறார்கள்?

**கலா :** கவிஞர் தமிழரசன் தான் தலைமை ஏற்கிறார். வா! எழுதலாம்.

**நீலா :** முதல் நிகழ்ச்சியாக இறைவணக்கம் என்று எழுது.

**கலா :** தமிழ்த்தாய் வாழ்த்துடன் இம்முறை நம் விழாவைத் தொடங்கலாமே?

**நீலா :** ஓ! சரி! தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் இடம்பெறும். பிறகு....?

**கலா :** தலைவர் பேசுவார்.

**நீலா :** இல்லை! இல்லை! அவரை வரவேற்க வேண்டாமா?

**கலா :** அப்போது வரவேற்புரை என்று எழுதட்டுமா?

**நீலா:** மிகவும் சரி! பிறகு 'தலைவர் உரையில்' 'சங்க இலக்கியங்களில் மொழிநடை' என்று எழுது.

**கலா :** சரி அப்படியே எழுதுகிறேன். அடுத்து...?

**நீலா :** 'நன்றி மறப்பது நன்றன்று' அல்லவா? எனவே அவருக்கு நன்றி கூற வேண்டும்.

**கலா :** 'நன்றியுரை'. சரியா?

**நீலா :** மிகச் சரி. 'நாட்டுப்பண்' என்று இறுதியில் எழுது.

**கலா :** அப்படியே செய்கிறேன். நன்றி நீலா!

**மாதிரிப்படி:**

**பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழா**

**நிகழ்ச்சி நிரல்**

நாள் : நேரம் :

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. வரவேற்புரை
3. தலைவர் உரை
4. நன்றியுரை
5. நாட்டுப்பண்.

***I. இது போல் முதியோர் கல்வி தொடக்க விழா, நூல் வெளியீட்டு விழா ஆகியவற்றிற்கு ஒரு நிகழ்ச்சி நிரல் எழுது.***

## ரமீலாவும் கணக்கும்

**II. அ. 'எல்லாவிதமான', 'ஒரேவிதமான', 'சிலவிதமான' இவற்றை உபயோகித்து கோடிட்ட இடங்களை நிரப்பு.**



1. ________________பறவைகள் ஒவ்வொரு வருடமும் 'ரங்கன் திட்டு' சரணாலயத்திற்கு வருகின்றன.

2. ரமீலாவிற்கு ________________ கணக்கு செய்து சலிப்பு ஏற்பட்டு விட்டது.

3. கோபாலுக்கு ______________ ஆயுதங்களிலும் பயிற்சி உண்டு.

**ஆ. 'ஒவ்வொன்றாக', 'மொத்தமாக', 'தனித்தனியாக' உபயோகித்து கோடிட்ட இடங்களை நிரப்பு.**



அம்மா வாங்கிக்கொண்டு வந்த இனிப்புகளை ________________ வாயில் போட்டுக் கொண்டு இருந்தாள் ரூபி. '' ______________ நீயே தீர்த்து விடாதே'' என்று குரல் கொடுத்தாள் அம்மா. ''எல்லோரும் ________________ சாப்பிட வந்தால் இப்படித்தான்'' என்று மேலும் சலித்துக் கொண்டாள்.

**தெரிந்து கொள்:**



காஜா நடந்தான்.



காஜா நடப்பித்தான்.



விஜயா ஆடினாள்.



விஜயா ஆட்டுவித்தாள்.


*தானே செய்யும் வினை <u>தன்வினை</u>.*
*பிறரைச் செய்ய வைக்கும் வினை <u>பிற வினை</u>.*



## ரேவதியின் வருத்தம்

**III. அ. கோடிட்ட இடங்களை அடைப்புக்குள்ளிருக்கும் சொற்களைப் பயன்படுத்திப் பூர்த்தி செய்.**


ரேவதி புதிதாக ஒரு ______________________ (கம்ப்யூட்டர்) வாங்கியிருந்தாள். அவளது நண்பன் பிரசாந்திற்கு அதைத் திருகிப் பார்க்க ஆசை. எனவே யாரும் இல்லாத நேரம் பார்த்து அவன் ______________________ (கம்ப்யூட்டர்) அப்படியும் இப்படியும் திருகிப் பார்த்தான். வெளியே சென்ற ரேவதி



____________ (வீடு) அடைந்தாள். அவள் வருவதைக் கண்ட பிரசாந்த் ____________ (அறை) விட்டு வெளியே மெல்ல நழுவிவிட்டான். ________ (குழந்தை) ஒத்த ரேவதியின் முகம் பழுதுபட்டிருந்த கம்ப்யூட்டரைப் பார்த்து வாடியது. ________ (அறிவு) உடைய யாரும் இத்தகைய ________ (செயல்) செய்திருக்க மாட்டார்கள்' என்று புலம்பினாள்.

(இரண்டாம் வேற்றுமை - 'ஐ')

**ஆ. பின்வரும் கோடிட்ட இடங்களை நிரப்பு.**



1. மாலா ____________ (மணல்) வீட்டைக் கட்டினாள்.



2. ''உனக்குத் தெரியுமா? எங்கள் பள்ளி ____________ (காந்தியடிகள்) திறக்கப்பட்டது'', என்று லாவண்யா சொன்னாள்.



3. விளம்பரப் பலகை ____________ (புயல்) சாய்ந்தது.

(மூன்றாம் வேற்றுமை உருபு - 'ஆல்')

**தெரிந்துகொள்:**

நாம் எவ்வாறு வழங்க விரும்புகிறோமோ அதற்கு ஏற்ப சொற்களும் மாறி வருகின்றன.

சுதா என்ற சொல் 'சுதாவை'; 'சுதாவிற்கு' என மாறிவழங்கப்படலாம். ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய வேற்றுமை உருபுகளைப் பெயர்ச் சொல் பெறும்.

**தெரிந்துகொள்:**

வேற்றுமை உருபு மறைந்துவரின் வேற்றுமைத் தொகை; வேற்றுமை உருபு வெளிப்படின் வேற்றுமை விரி.

**இ. கோடிட்ட இடங்களை நிரப்பு. உனக்காக உதாரணம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.**

| வேற்றுமை விரி | வேற்றுமைத் தொகை |
|---|---|
| உதாரணம் | |
| அல்லி ஒரு தொட்டியைக் கட்டினாள். | அல்லி ஒரு தொட்டி கட்டினாள். |
| 1. சேகர் வானொலிப் பெட்டியைத் தயாரித்தான்.  | சேகர் ______ ______. |
| 2. அரசி காய்ச்சலை வரவழைத்துக் கொண்டாள்.  | அரசி ______ ______. |
| 3. டெய்சி உயிரியல் பூங்காவில் ஆந்தையைப் பார்த்தாள்.  | ______ ______ ______. |

# 8




## நட்சத்திர மீனின் அங்கலாய்ப்பு

**I. தகுந்த நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்திக் கீழுள்ள பத்தியை ஒழுங்குபடுத்து.**



அங்கே செல்வது கடற்சிங்கம் தானே ஏதோ காட்டிற்கே அரசனான சிங்கம் போல் திமிராகப் போகிறதே இந்த கடற்சிங்கத்திற்கே இவ்வளவு கர்வம் இருந்தால் எனக்கு எவ்வளவு கர்வம் இருக்கும் வானத்து நட்சத்திரம் போல் நான் கடல் நட்சத்திரம் என்று நட்சத்திர மீன் அங்கலாய்த்தது



## நேட்டன் யாஹு

இஸ்ரேலிய விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஆப்பிரிக்காவில் உகாண்டாவில் எண்டப் விமான நிலையத்தில் இறக்கப்பட்டது. விமானத்தினுள் 300க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். தீவிரவாதிகளோ தங்கள் தலைவரை விடுதலை செய்ய வேண்டும் இல்லாவிடில் விமானத்தில் உள்ள அனைவரையும் கொன்றுவிடுவோம் என்று எச்சரித்தனர். இஸ்ரேலிய அரசு நேட்டன் யாஹு என்ற திறமையான விமானப் படைவீரர் தலைமையில் இரண்டு போர் விமானங் களை அனுப்பியது. ஒன்றில் அதிரடிப்படை வீரர்கள் இருந்தனர். அடுத்ததில் எவரும் இருக்கவில்லை.

யாருமற்ற விமானம் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. நேட்டன் யாஹு தீவிரவாதிகளைத் திசைதிருப்பப் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் அதிரடிப்படை வீரர்களின் எதிர்பாராத தாக்குதலில் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதற்கிடையில் பயணிகள் தவழ்ந்தபடியே அடுத்த விமானத்தில்

ஏறித் தப்புவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனால் வீரர் நேட்டன் யாஹூ மட்டும் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.


300 க்கும் மேற்பட்ட பயணிகளைக் காக்கத் தன் உயிரையே தந்த அந்தத் தியாகியின் மரணம் குறித்து உலகமே கண்ணீர் சிந்தியது.

**II. மேலே நீ படித்த நிகழ்ச்சி படக்கதையாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. படங்கள் முறைமாறியுள்ளன. நீ படங்களை முறையாக வரிசைப்படுத்து.**





## ஜன்னலின் நடுக்கம்



ரோஹித்தும், ரோஷனாவும், அமீரும், விடுமுறையை எப்படிக் கழிக்கலாம் என்று யோசித்தனர். மூலையில் கிடந்த கிரிக்கெட் மட்டை அவர்களை 'வா வா' என அழைத்தது. ரோஹித் கிரிக்கெட்டில் புலி! நண்பர்களோடு விளையாடி சதம் சதமாகக் குவிப்பவன்! குஷி பிறந்தது! விளைவு கண்ணாடி ஜன்னல் நடுங்க ஆரம்பித்தது. ஜன்னல் திரைச்சீலையிடம், ''அண்ணா! என்னை கவனமாகக் காப்பாற்றுங்கள்! வெளியே மழை பெய்வதால் ரோஹித் உள்ளே கிரிக்கெட் ஆடுவான்! என்னை உடைத்து விடுவான்'' என்று கெஞ்சியது. திரைச்சீலையும் ''சரி! சரி!'' என அசைந்து தலையாட்டியது.

ரோஹித்தின் முதல் அடி குளிர்பதனப் பெட்டியை நோக்கி வந்தது. நல்லவேளை! சற்று முன்னாலேயே அமீரால் தடுக்கப்பட்டுவிட்டது. அடுத்த குறி ஜன்னலை நோக்கி! அப்பாடா! திரைச்சீலை பந்தை சுருட்டிக் கொண்டது!

அடுத்த பந்து இஸ்திரிப்பெட்டியின் மேல். டமால்! பெட்டி கீழே விழுந்தது! பாவம்! பிறகென்ன! பிஸ்கெட் டின், சுவரில் மாட்டப்பட்டிருந்த டென்னிஸ் மட்டை, பள்ளிக்குக் கொண்டு செல்லும் தண்ணீர் பாட்டில்! எல்லாம் கீழே விழுந்து உருண்டன.

ஜன்னலோ நடுங்கிக் கொண்டே இருந்தது! இந்த முறை எப்படியும் அமீர் ரோஹித்தை அவுட் ஆக்கிவிட வேண்டும் என்று பந்து போட முனைந்தான். 'ரோஹித் அவுட் ஆக

மாட்டான் நாம் தான் அவுட்' என்று நடுநடுங்கியது கண்ணாடி ஜன்னல்! அந்த நேரத்தில் அழைப்பு மணி ஒலித்தது. ரோஹித் ஓடிப்போய் கதவைத் திறந்தான்! அவனது அம்மாவும் அப்பாவும் கடையிலிருந்து திரும்பிவந்திருந்தனர்.

'அப்பாடா! பெரிய கண்டத்திலிருந்து தப்பித்தோம்' என்று புன்னகை பூத்தது கண்ணாடி ஜன்னல். திரைச்சீலை காற்றில் அசைந்து 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டது! அம்மா கொண்டுவந்த கேக்கும் ஐஸ்கிரீமும் ரோஹித்தை விளையாட்டி லிருந்து திருப்பிவிட்டன.

**III. அ. இப்பகுதியில் இடம் பெற்றுள்ள திசைச் சொற்களை (தமிழில் வழங்கிவரும் பிறமொழிச் சொற்களை) எடுத்தெழுது.**

| | | |
|---|---|---|
| 1. ________ | 5. ________ | 9. ________ |
| 2. ________ | 6. ________ | 10. ________ |
| 3. ________ | 7. ________ | 11. ________ |
| 4. ________ | 8. ________ | 12. ________ |

**ஆ. கீழே சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து வட சொற்களை மட்டும் எடுத்துப் பெட்டிக்குள் எழுது.**

| | | | |
|---|---|---|---|
| 1. நமஸ்காரம் | | 6. பிரம்மன் | |
| 2. சரஸ்வதி | | 7. விஷ்ணு | |
| 3. சீதை | | 8. ஹம்ஸத்வனி | |
| 4. ரோஜா | | 9. மோகனம் | |
| 5. அரிஅரன் | | 10. வணக்கம் | |

# 9

## வீடில்லாத முடியாதவர்கள்

***I. பீர்பாலின் அறிவுக் கூர்மைக்கு இந்தக் கதை ஒரு எடுத்துக்காட்டு. உனது அறிவுக் கூர்மையைச் சோதிக்கப் பின்வரும் வினாக்கள் வருகின்றன. விடையளி.***



ஒரு மாலையன்று சக்கரவர்த்தி அக்பரும், பீர்பாலும் மாறுவேடத்தில் நகர்வலம் வரும் பொழுது பிச்சைக்காரர் களையும், ஊனமுற்றோர்களையும் பார்த்தார்கள். அக்பர் ''நம் நாட்டில் இவ்வளவு வீடில்லாதவர்களா இருக்கிறார்கள்? இப்பொழுதே இவர்களுக்கு குடிசைகள் அமைக்கப்பட்டு, இலவச உணவும் வழங்கப்பட வேண்டும்'' என்றார். அதற்கு பீர்பால் ''மன்னிக்க வேண்டும் மகாராஜா. பல சோம்பேறிகள் இதைப் பயன்படுத்திக் கொண்டு உழைக்காமலேயே இருப்பார் கள். ஆகையால்...''

''நான் சொன்னதைச் செய்'' என்றார் அரசர். அதன்படியே பல குடிசைகள் கட்டப்பட்டன. அவற்றைப் பார்வையிட அக்பரே நேரில் சென்றார். அங்கு இருந்த மக்களைப் பார்த்துவிட்டு அவர் ''பீர்பால்! நம் நாட்டில் இவ்வளவு முடியாதவர்களா உள்ளனர்!'' என்றார். அதற்கு பீர்பால் ''இல்லை சக்கரவர்த்தி! இவர்களுள் நூற்றில் ஐம்பது பங்கு பேர் சோம்பேறிகள்தான்'' என்றார்.

''நீ சொன்னது எவ்வளவு உண்மை என்று இப்பொழுதுதான் உணர்கின்றேன். இப்பொழுது ஏதாவது செய்'' என்றார் அக்பர்.


பீர்பால் அங்கு இருந்தவர்களைப் பார்த்து ''நாங்கள் இக்குடிசைகளுக்குத் தீ வைக்கப் போகிறோம்'' என்று கூறி, வாய் மூடுவதற்குள் அங்கு பலர் ஓடத் தொடங்கினர். சிலர் உட்கார்ந்து அழத் தொடங்கினர். அப்பொழுது அறிவின் உறைவிடமான பீர்பால், ''மகாராஜாவே! இவர்கள்தான் வீடில்லாத முடியாதவர்கள். இவர்களை இங்கு தங்க அனுமதியுங்கள்'' என்றார்.

1. *அக்பரும் பீர்பாலும் நகர்வலம் வந்தபோது யாரைச் சந்தித்தார்கள்?*
2. *அக்பர் அவர்களுக்குச் செய்த உதவிகள் யாவை?*
3. *பீர்பால் ஏன் இதை எதிர்த்தார்?*
4. *அக்பர் பீர்பால் சொன்னதே சரி என்று எப்படி உணர்ந்தார்?*
5. *பீர்பால் செய்த சமயோசிதச் செயல் என்ன?*
6. *இறுதியில் இந்தக் கதையில் யார் வீடில்லாத முடியாதவர்கள்?*
7. *உனக்குத் தெரிந்த வேறு பீர்பால் கதைகள் என்னென்ன?*



## *விண்ணில் விளையாடலாம் வா!*

**II. குறிப்புகளைப் பயன்படுத்தி ரோபோவைச் சொற்களால் நிரப்பு. விடைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**



**மேலிருந்து கீழ்:**

1. யுரேனஸைச் சந்தித்து விட்டுத் தொடர்ந்து நெப்டியூனுக்குச் செல்லும் விண்கலம்!

2. சூப்பர் நோவாவைக் கண்டுபிடித்தவர்.

3. சனிக்கோளின் நிலவு.

4. முதலில் விண்ணில் கண்களுக்குத் தெரியும் கோள்.

**இடமிருந்து வலம்:**

5. மனிதன் உயிர்வாழத் தேவையான காற்று மண்டலம்.

**விடைகள்**

1. வாயேஜர்
2. ஷெல்டன்
3. டைடன்
4. வெள்ளி
5. ஓஸோன்



## கிழிக்காதே! பாப்பா கிழிக்காதே!

**III. உன் பள்ளியில் நூலகம் இருக்கிறதல்லவா? இங்கு நூலகத்தில் நீ எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது படங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பட விளக்கத்தை நீ எழுது. உனக்காக இதோ ஒரு உதாரணம்.**

உதாரணம்



*புத்தகத்தின் தாள்களைக் கிழிக்கக் கூடாது.*



1. ______________________________
______________________________.




2. ______________________________
______________________________.



3. ______________________________
______________________________.




4. ______________________________
______________________________.



5. ______________________________
______________________________.

## ஒற்றுமையில் வேற்றுமை




**IV. மேலே படத்தில் காணப்படும் எண்களையும் பெயர்களையும் வரிசைப்படுத்து. தொடர்ந்து வரும் சொற்றொடருக்குப் பொருத்தமான எண்களை அடுத்துள்ள பெட்டியில் எழுது.**

1. கன்றுக்குப் புல் கொடுத்தாள். ☐
2. பாம்புக்குப் பகை கருடன் ☐
3. காமினிக்குத் தோழி ஸ்வப்னா ☐
4. மாணவர்க்கு அழகு ஒழுக்கம் ☐
5. சட்னிக்குத் தேங்காய் கொண்டு வா! ☐
6. புண்ணியத்திற்குத் தானம் செய் ☐
7. வீராவிற்குத் தம்பி விஜயன் ☐

(நான்காம் வேற்றுமை - 'கு')



## பூங்காவிலிருந்து...

**V. அ. உதாரணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது போல கீழேயுள்ள வாக்கியங்களை மாற்றி எழுது.**

**உதாரணம்**

ரகு பூங்காவின் நீங்கினான். **நீங்கல்**
ரகு பூங்காவிலிருந்து நீங்கினான்.





1. பாலாஜி கடையின் நீங்கினான்.

_______________________________.



2. ஸம்யுக்தா கல்லூரியின் நீங்கினாள்.

_______________________________.




3. ஸோமன் படையின் நீங்கினான்.

_______________________________.

(ஐந்தாம் வேற்றுமை – 'இன்')

**ஆ. கோடிட்ட இடங்களை நிரப்பு.**

**உதாரணம்**



காயின் நலலது பழமே! **ஒப்பு**


1. ____________ நல்லது ஒழுக்கம் (உயிர்).

2. ____________ நல்லது செயல் (பேச்சு).

3. கோதுமை சிறந்தது ____________ (அரிசி).

4. மோர் ____________ சிறந்தது (காப்பி).

**இ. பூர்த்தி செய்.**



உதாரணம்

*கல்கத்தாவின் மேற்கு மும்பாய்*


**எல்லை**

1. ____________ கிழக்கே கடல் (சென்னை).

2. ____________ மேற்கே அரபிக்கடல் (மும்பை).

3. ____________ தெற்கே அலைகடல் (குமரி).

**ஈ. பூர்த்தி செய்.**



உதாரணம்

*அழகிற் சிறந்தது தாஜ்மகால்.*

**காரணம்**

1. ____________ (வீரம்) சிறந்தவன் வில் விஜயன்.

2. ____________ (தானம்) உயர்ந்தவன் கர்ணன்.

3. ____________ (நாட்டியம்) சிறந்தவள் மாதவி.

# 10

## தண்ணீரின் கலக்கம்

**சதீஷ்** : ரேகா! ரேகா!

**ரேகா** : வா சதீஷ்! உள்ளே வந்து உட்கார். இந்தா தண்ணீர்! உனக்குத் தாகமாய் இருக்கும்.

**சதீஷ்** : ரேகா! கேட்பதற்கு மன்னிக்கவும்! இந்தத் தண்ணீர் ஏன் பழுப்பு நிறமாக இருக்கிறது?

**ரேகா** : என்னவோ தெரியவில்லை! கடந்த சில மாதங்களாகத் தண்ணீர் இப்படித்தான் கலங்கியே வருகின்றது.

**சதீஷ்** : அதற்கு நீ குடிநீர் வாரிய அலுவலகத்திற்குச் சென்று புகார் கொடுக்கலாமே?




**ரேகா** : சதீஷ்! எனக்கு அது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. நீ கூட்டிச் செல்கிறாயா?

**சதீஷ்** : சரி! வா! செல்வோம்!

**ரேகா** : சரி! புறப்படு.

(அலுவலகத்தில்)

பணியாளரிடம்,

**சதீஷ்** : ஐயா! நாங்கள் திருவள்ளுவர் நிழற் சாலையில் வசித்து வருகிறோம். எங்களுக்குக் குழாயில் வரும் தண்ணீர் கலங்கியே இருக்கிறது.

**பணியாளர்**: அப்படியா தம்பி! ஒரு புகார் எழுதிக் கொடுத்துவிட்டுச் செல்!

சதீஷ் : அப்படியே ஆகட்டும்! ரேகா வா! ஒரு விண்ணப்பம் எழுதலாம்!

ரேகா : எப்படித் தொடங்குவது?

சதீஷ் : ரேகா! கடிதத்தின் இடப்புறம், விடுநர் முகவரியில் உன் பெயரையும் முகவரியையும் எழுது.

ரேகா : சரி. பிறகு?

சதீஷ் : பெறுநர் முகவரியையும் இடப்பக்கமே எழுது.

ரேகா : யாருக்கு?

சதீஷ் : செயற்பொறியாளர், குடிநீர் வாரியம், சென்னை - 600 002 என்று முகவரியை எழுது.

ரேகா : சரி. அப்படியே எழுதுகிறேன்! பிறகு?

சதீஷ் : அவரை விளித்து, விண்ணபத்தின் விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

ரேகா : சரி! மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் :

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டி:

சரியா?

சதீஷ் : மிகச்சரி. சரியான குடிநீர் இன்றி நீங்கள் படும் தொல்லையை எழுதி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகிக்கக் கோரிக் கடிதத்தை முடி!

ரேகா : சரி கடிதத்தின் இறுதியில் என்ன எழுத வேண்டும்?

சதீஷ் : இப்படிக்கு உங்கள் உண்மையுள்ள என்று எழுதி உன் கையொப்பத்தை இடு.

ரேகா : இடம், நாள் இவற்றை எங்கு எழுதுவது?

சதீஷ் : இடப்பக்க மூலையில் எழுது.

ரேகா : சரி! எழுதிவிட்டேன். சதீஷ் வா! அதிகாரியைப் பார்த்துக் கொடுத்துவிட்டு வரலாம்.

சதீஷ் : சரி! வா!

**I. மேலே ரேகா எழுதிய கடிதம் எப்படி அமைந்திருக்கும் என்று நீ எழுதிக்காட்டு பார்க்கலாம்!**

# கனியின் சுவை

**உதாரணம்**

*கண்ணனது கருணை.*
*மாற்றம் (கண்ணன் + உடைய)*
*கண்ணனுடைய கருணை.*

**II. அ. உதாரணத்திலுள்ளது போன்று கீழேயுள்ள வாக்கியங்களை மாற்றிக் காட்டு.**



1. பறவையினது இறகு.
   ------------ இறகு.



2. மாணவர்களது வீரம்.
   --------------- வீரம்.
3. கனியினது சுவை.
   ---------------- சுவை.



4. ஆசிரியர்களது தியாகம்.
   ----------------- தியாகம்.

(ஆறாம் வேற்றுமை - 'அது')

**ஆ. கீழே சில வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பிரிக்க முடிந்தவற்றை ✓ இக்குறியிலும் முடியாதவற்றை ✕ இக்குறியிலும் அடையாளமிடு.**

**உதாரணம்**

*இராவணனது தலை* ✕




1. *கடைக்காரரின் துண்டு* ☐



2. விக்ரமது எழுதுகோல் ☐

3. தையூப்பின் கை ☐





4. சோப்பினது தூள் ☐

**தெரிந்துகொள் :**


பிரிக்க முடிந்தால் பிறிதின் கிழமை
பிரிக்க முடியாவிடில் தற்கிழமை

நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது - என்ற பொருளில்,
'இல்', 'இன்', வந்தால்தான் ஐந்தாம் வேற்றுமை.

**இ. கோடிட்ட இடங்களைச் சரியான வேற்றுமை உருபு கொண்டு நிரப்பு.**



1. மலையின்__________குகை (கண்).
2. கொடி __________ பூத்த மலர் (இல்).



3. ஊர்__________ ஓடுவது ஆறு (இல்).



4. கூட்டத்தின் நுழைந்த திருடன் (இடை).



5. கட்டடம்__________ டிஷ்ஆன்டெனா (மேல்).

**உதாரணம்**

*இடி இடிக்கும்போது மரம் __________ நிற்காதே (கீழ்).*
*இடி இடிக்கும்போது மரத்தின் கீழ் நிற்காதே.*

6. ஒற்றையடிப்பாதை __________ நடந்தாள் (வழி).

(✱ ஏழாம் வேற்றுமை – 'கண்')

✱ தற்கால வழக்கில் இல்லை.



DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

ஈ. பின்வரும் சொற்களை எவ்வாறு உச்சரிப்பாய்?

**உதாரணம்**

*தங்கை = தங்கை + ஆய் = தங்காய்!★*

*★ இலக்கிய வழக்கு*

1. நண்பன் = நண்ப! நண்பா!
2. கயல் விழி = கயல்விழி!
3. செல்வன் = செல்வனே!



(எட்டாம் வேற்றுமை – 'விளி')

**உ. கோடிட்ட இடங்களை நிரப்பு.**

1. நான் என்ற சொல் வேற்றுமை உருபு ஏற்றால் __________ எனத் திரியும் (என், நான், நம்).
2. நீ என்ற சொல் வேற்றுமை உருபு ஏற்றால் __________ எனத் திரியும் (உன், நான், உங்கள்).
3. உங்கள் என்ற மாறுதலை __________ என்ற சொல் அடையும் (நீ, நீங்கள், உன்).
4. உங்களுக்கு என்ற மாறுதலை __________ அடையும் (உம், நீங்கள், நீ).

# 11

## ஏனிந்தச் சிரிப்பு!




**I. மேலேயுள்ள படத்தில் முதலாமெண்ணுள்ள ஓட்டக்காரர் இரண்டாமெண்ணுள்ள ஓட்டக்காரரிடம் ஏதோ பேசுவது போலிருக்கிறதல்லவா? என்ன பேசியிருப்பார்கள் என்பதை நீ கற்பனை செய்து எழுது.**

*முதல் ஓட்டக்காரர்* : ____________________ .

*இரண்டாம் ஓட்டக்காரர்* : ____________________ .

*முதல் ஓட்டக்காரர்* : ____________________ .

*இரண்டாம் ஓட்டக்காரர்* : ____________________ .

## நாட்டு முன்னேற்றம்

**கீழேயுள்ள கட்டுரையைப் படி.**

பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடு. பாரத நாடு பழம்பெரும் நாடு. செந்நெல்லும், கரும்பும், கனியும், தானியங்களும் விளையும் நாடு. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற நாடு.

விடுதலைக்குப் பின் நம் நாட்டின் வளர்ச்சி என்ன? நம் நாட்டின் சாதனை என்ன? யோசித்துப் பார்ப்போம்!



மாணவர்கள் கையில் இந்தியாவின் எதிர்காலம் உள்ளது என்று விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் சொன்னார்கள். இன்று படிப்பில் முதன்மையாக நிற்கும் மாணவர்கள் வெளிநாடு சென்று தங்கிவிடத் துடிக்கிறார்கள்.

அவர்களுடைய படிப்பிற்காக அரசாங்கம் செலவிடும் வரிப்பணம் நாட்டு வளர்ச்சிக்கு உதவவில்லை.

எனவே இளைஞர்களே! தாய்த்திரு நாடுதனைப் பெற்ற அன்னையைப் போலப் போற்றும் எண்ணம் வர வேண்டும்! படித்த மாணவர்கள் பணத்திற்கும் பதவிக்கும் மட்டுமே ஆசைப்படுதல் சரியான பாதை அல்ல.

***சுருக்கி எழுதும்போது கவனிக்க வேண்டியவை:***

1. முதலில் முக்கியமான குறிப்புகளை எடுத்துக்கொள்.
2. சொற்களை எண்ணி மூன்றில் ஒரு பங்காக்கிக் கொள்.
3. சுருக்கி எழுத - திருந்தாப் படிவம் ஒன்றைத் தயார் செய்!
4. திருந்தாப் படிவத்தில் தேவையான மாறுதல்களைச் செய்து திருந்திய படிவம் அமை.
5. பகுதிக்கு ஏற்ற தலைப்பு கொடு.
6. கொடுக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ள சொற்களையும் நீ சுருக்கி அமைத்த பகுதிச் சொற்களையும் எண்ணி எழுது.

<u>திருந்திய படிவம்:</u>

வளமிக்க நாடாய்த் திகழ்ந்த பாரதம் ஆங்கிலேயரால் அடிமைப்படுத்தப்பட்டது. பாடுபட்டு சுதந்திரம் பெற்றோம்; இருந்தும் பயனில்லை. இந்தியாவை முன்னேற்ற வேண்டிய படித்த இளைஞர்கள் வெளிநாடு செல்கின்றனர். இதனால் இவர்களுக்காக செலவிடப்படும் பணம் வீணாவதோடு உழைப்பும் வீணாகிறது. இளைஞர்கள் பதவிக்கும், பணத்திற்கும் ஆசைப்படாமல் இந்தியாவை முன்னேற்ற முன்வர வேண்டும்.

## ஆகு பெயர்

''மாம்பழம்! மாம்பழம்'' என்று மாம்பழம் விற்றுக் கொண்டு சென்ற சப்தம் காதுகளில் விழ வேகமாக வெளியே ஓடிவந்தாள் கீதா! கீதா ஓட அவள் பின்னால் அவளது செல்லம் ரோமியோவும் வாலை ஆட்டிக் கொண்டே ஓடிவந்தது.

''மாம்பழம்!'' என்று கூப்பிட்டுக்கொண்டே சென்றாள் கீதா. அது வண்டிக்காரன் காதில் விழவில்லை. ''அந்த வண்டியைக் கூப்பிடுங்கள்'' என்று எதிரில் வந்தவர்களிடம் கூறினாள். வண்டியும் நின்றது. ''ஒன்று என்ன விலை?'' என்று கேட்டாள் கீதா. ''மூன்றுக்குப் பத்து ரூபாய்'' என்றான் வண்டிக்காரன். 'நம் வீட்டில் எத்தனை பேர் உள்ளனர்? தலைக்கு ஒன்றாகக் கொடுத்தால் எத்தனை வாங்க வேண்டி வரும்?' என்று கணக்கிடத் தொடங்கினாள் கீதா. ஏழு பழங்கள் வேண்டும்!



''ஐயா! இருபது ரூபாய்க்கு ஏழு பழங்கள் கொடுங்கள்'' என்று இருபது ரூபாயை நீட்டினாள். 'சரி' என்று வண்டிக்காரனும் இசைந்து ஏழு பழங்களைத் தந்தான். ''நான் இருபது ரூபாய்க்கு ஏழு பழங்கள் வாங்கினேன்! மேலே ஒன்று கொடுக்கக்கூடாதா?'' என்று கேட்டாள். சாதுர்யமான அவளது பேச்சால் சிரித்த வண்டிக்காரன் மேலும் ஒரு பழத்தைக் கொடுத்தான். 'அப்பாடா! ஏழு பேருக்கு ஏழு பழம்' என்ற நிம்மதியோடு வீட்டுக்குத் திரும்பினாள் கீதா. தான் பழம் வாங்கிய விதத்தை வீட்டிலுள்ள எல்லோரிடமும் கூறி பெருமிதப்பட்டாள்.

தலைக்கு ஒன்று எனக் கொடுத்தவள், ''மீதி எனக்குத்தான்'' என்றாள். வீடே அவளைப் பாராட்டியது.

**II. மேற்கண்ட பகுதியில் சில பெயர்ச் சொற்கள் தமக்குரிய பொருளை உணர்த்தாமல் அவற்றோடு தொடர்புள்ள வேறு பொருள்களை உணர்த்துகின்றன. அப்பெயர்ச் சொற்களையும் தொடர்புள்ள பொருள்களையும் கண்டுபிடி.**

**உதாரணம்**

*வீடு - வீட்டில் உள்ள கீதாவின் உறவினர்.*

1.

2.

3.

4.

**தெரிந்து கொள்:**

**ஆகுபெயர்:** பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், பண்பாகு பெயர், தொழிலாகு பெயர், எண்ணல் அளவை ஆகுபெயர், எடுத்தல் அளவை ஆகு பெயர், முகத்தல் அளவை ஆகு பெயர், நீட்டல் அளவை ஆகு பெயர், சொல்லாகு பெயர், தானியாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கர்த்தாவாகு பெயர், உவமையாகு பெயர் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## *சமயோசிதம்*

**III. பின்வரும் பகுதியிலுள்ள தொடரை முடிக்கும் சொற்களையும் (முற்று) முடிக்காத சொற்களையும் (எச்சம்) கண்டுபிடித்து அடிக்கோடிடு.**

காட்டில் நரிக்கு ஒரே சந்தோஷம்! தன்னை தந்திரத்தால் வெல்பவர் யாரும் இல்லை என்று இறுமாப்பு! அது காட்டுப் பூனை ஒன்றை வழியில் கண்டது. புதிதாக ஏதாவது கிடைத்தால் நரி விடுமா! தன் பெருமையை அளக்கத் தொடங்கியது.

அந்த பெருமையில் காட்டை விட்டு வெகு தொலைவு வந்ததுகூட அதற்குத் தெரியவில்லை! காட்டுப் பூனை தனக்குத்



தந்திரங்கள் எல்லாம் தெரியாது என்றும், தேவைப்பட்டால் மரம் ஏறத்தெரியும் என்றும் அடக்கமாகக் கூறியது. ''எனக்கு எல்லாம் தெரியும்'' என்று காட்டுப் பூனையை மட்டம் தட்டியது நரி.

சிறிது தொலைவில் வேட்டைக்காரர்கள் வரும் ஓசை கேட்டு காட்டுப்பூனை வேகமாக மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டது. நரியோ, 'என்ன தந்திரம் செய்து தப்பிக்கலாம்' என்று யோசித்தபடியே நின்று கொண்டிருந்தது. வேட்டைக் காரர் கையில் சிக்கியது. ஆயிரம் தந்திரம் தெரிந்தால் மட்டும் போதாது; சமயோசிதமாகப் பயன்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும் எனக் காலம் கடந்து நரி உணர்ந்து கொண்டது.

**தெரிந்து கொள்:**


*வினைமுற்று*

| *தெரிநிலை* | *குறிப்பு* |
|---|---|
| 1. வாடியது மலர் | வல்லவள் வசுமதி |
| 2. வகுப்பு பேசிற்று | நல்லவன் ஹேமந்த் |
| 3. கோடை வருகின்றது | செல்வன் ராகுல் |
| 4. மனம் நிற்கிறது | வள்ளல் பாரி |
| 5. கால் நடக்கிறது | |
| 6. புகழ் வரும் | |
| 7. செல்வம் சேரட்டும் | |


முழுமையான வினைச்சொல் வினைமுற்று செய்பவன், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய ஆறினையும் உணர்த்தும்.

**எச்சம் :**

முழுமை பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும். பெயரைக் கொண்டு முழுமை பெறும் எச்சவினை பெயரெச்சம். இதில் தொழிலும், காலமும் தெரியும்.



ஓடிய நாய் - இறந்தகாலம்
பேசுகின்ற கிளி - நிகழ்காலம்
பாடும் பறவை - எதிர்காலம்



ஓடா நாய், பேசாகிளி, பாடாப்பறவை என எதிர்மறையிலும் வரும்.

வினையைக் கொண்டு முழுமையடையும் வினைச்சொல் வினையெச்சம்.



நடந்து வந்தான்.
பாடி முடிக்கிறான்.
ஓடி விடுவான்.



# 12

## ஜகதீஸ் சந்திரபோஸ்

**I. அ. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் துணையோடு கட்டுரை ஒன்று எழுது.**

*ஜகதீஸ் சந்திரபோஸ் – பிறப்பு 1858-ல் – கிழக்கு வங்காளம் - கல்வி – கல்கத்தா – லண்டன் பல்கலைக்கழகம் – 1900 – பாரிஸில் அகில உலக அறிவியல் மாநாட்டில் பங்கேற்பு – இலண்டனில் இராயல் சொசைட்டியில் ஆராய்ச்சி – 1923-ல் போஸ் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பு – 1937 - இயற்கை எய்துதல்*

**ஆ. பின்வரும் பத்தியைப் படி. இது போன்ற பொதுக் கருத்துக் குறிப்புகளை எழுதிப் பழகு.**


> புகைபிடிக்கும் பழக்கம் பிற்காலத்தில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. இப்பழக்கத்தை நிறுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பல.
>
> 1. இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, உடல் வெப்ப நிலை சீரடையும்.
> 2. இரத்தத்தில் கார்பன் மோனாக்ஸைடின் அளவு இயல்படையும். பிராணவாயுவின் (ஆக்ஸிஜன்) அளவு அதிகரிக்கும்.
> 3. மாரடைப்பு வரும் வாய்ப்புகள் குறையும்; நரம்புகள் புத்துணர்வு பெறும்.
> 4. நுரையீரல் பாதிப்படைவது தடுக்கப்படும்.
> 5. இருமல், சளித் தொல்லை வெகுவாகக் குறையும்.
> 6. மூச்சு முட்டுதல் தொல்லை இருக்காது.
>
> மொத்தத்தில் புகைபிடித்தலை நிறுத்துவது மிகமிக அவசியம்!

## வழக்கு

**II. பின்வரும் சொற்றொடர்களில் பொருள் விளங்கும் சொற்றொடர்களை மட்டும் ✓ இக்குறியிட்டு அடையாளப்படுத்து.**

1. தமிழ் இனிமையான மொழி ☐
2. தத்தை பேசுமா? ☐
3. குடந்தை எங்குள்ளது? ☐
4. நேரு அமரரானார் ☐
5. நாம் இந்தியர் ☐
6. கச்சியம்பதி சிறந்த நகர் ☐
7. காற்றின்றி வாழ முடியுமோ? ☐
8. கால்வாயில் நீர் ஓடியது ☐
9. பரி வாங்கி வரச் சொன்னேன் ☐
10. கோவை மாநகர் துணி உற்பத்திக்குப் பேர் போனது ☐

**தெரிந்து கொள்:**



# 13



## அறிவியல் முன்னோடி

இந்த மண்ணில் பொறுமைக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் பலர். அவர்களுள் சர்.ஐசக் நியூட்டனின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்று சிந்தனையைத் தூண்டவல்லது.



பல ஆண்டுகள் சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்தார் நியூட்டன். அதைக் காகிதங்களில் எழுதி வைத்திருந்தார். மேஜையின் மீது அடுக்கி இருந்த இந்த காகிதங்களின் அருகில் மெழுகுவர்த்தி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. நியூட்டன் மாலை நேர உலாவுக்குச் சென்றிருந்தார்.

நியூட்டனின் நாய் டைமண்ட் அறையினுள் புகுந்தது. மேசைமேல் அது தாவியதில் மெழுவர்த்தி சாய்ந்தது. காகிதங்கள் நெருப்புக்கு இரையாயின. உலாவச் சென்ற நியூட்டன் நடந்ததை அறிந்து அதிர்ந்தார். இனி என்ன செய்ய முடியும்? நாயிடம் கோபம்கொண்டு என்ன பயன்? அந்தக் காகிதங்களின் மதிப்பு அதற்கு என்ன தெரியும்?

எனவே அன்போடு நாயைத் தடவிக் கொடுத்தார். அதன் செயலுக்கு வருந்தினாரே அன்றி பொறுமையைக் கைவிடவில்லை. மீண்டும் ஆராய்ச்சியைத் தொடங்கினார்.

**I. மேலேயுள்ள பகுதியைப் படித்தாயா? இனி கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளி.**

1. *நியூட்டன் ஆராய்ச்சி செய்து எழுதிவைத்திருந்த காகிதங்கள் எங்கு, எதனருகில் வைக்கப்பட்டிருந்தன?*
2. *நாய் என்ன செய்தது?*

3. நாயின் செயலைக் கண்டு நியூட்டன்,

அ. அதை ஆவேசத்துடன் அடித்தார்.

ஆ. அதன் செயலுக்கு வருந்தினார்.

இ. நாயை வீட்டிலிருந்து வெளியேற்றினார்.

4. இந்த நிகழ்ச்சி மூலம் உனக்குத் தோன்றும் கருத்து என்ன?

## காலால் வந்த வினை



நான்கு வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்து துணிக்கடை நடத்தி வந்தனர். கோவை, காஞ்சி எனப் பருத்திக்கும் பட்டுக்கும் பேர்போன நகரங்களிலிருந்து சரக்குக் கொண்டு வந்து விற்று வந்தனர். கிடைத்த லாபத்தை முறையாகப் பிரித்துக் கொண்டனர். ஒரு நாள் ஒரு அழகான குட்டிப்பூனை அவர்களை வந்து சேர்ந்தது. நால்வரும் எலிகளைப் பிடிக்க இப்பூனை உதவும் என்று ஆசையுடன் வளர்க்க முடிவு செய்தனர். வியாபாரிகள் அல்லவா? பூனையின் பராமரிப்பைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர்.

ஒவ்வொரு காலையும் ஒவ்வொருவர் பராமரிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டனர். நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் பூனையின் ஒரு காலில் பலமான அடி! விந்தி விந்தி நடந்தது. அடிபட்ட காலின் உரிமையாளர் காலில் எண்ணெய்த் துணியைச் சுற்றி வைத்தார். வியாபார விஷயமாகத் திருச்சி சென்றனர் நால்வரும்.தற்செயலாக பூனையின் காலில் சுற்றப்பட்டு இருந்த துணியில் நெருப்புப் பற்றிக் கொண்டது. எரிச்சல் தாங்க முடியாத பூனை துணி மூட்டைகளின் மீது ஏறி ஓடியது. அவ்வளவுதான்! துணிகளிலும் நெருப்புப் பற்றிக் கொண்டது.

திரும்பி வந்த நால்வரும் தங்கள் துணி மூட்டைகள் எரிந்து சாம்பலாகியிருந்ததைப் பார்த்தனர். அது எவ்வாறு நிகழ்ந்தது என்று புரிந்து கொண்டனர்.

பூனையின் அடிப்பட்ட காலால்தான் இந்த விபத்து நடந்தது. எனவே அக்காலுக்கு உரியவன் மற்ற மூவருக்கும் நஷ்டஈடு தர வேண்டும் என்று வாதாடினர்.

வழக்கு நீதிபதியிடம் சென்றது. நீதிபதி ''ஏற்கெனவே தரையில் ஊன்ற முடியாமல் அடிபட்டிருந்த காலாலால் அந்தப் பூனை மூட்டைகள் மேல் தாவி இருக்காது. மற்ற மூன்று கால்களால்தான் ஓடி இருக்க முடியும். எனவே நீங்கள் மூவரும் மற்றவருக்குத்தான் நஷ்டஈடு தர வேண்டும். ஆனால் ஒரு காலில் எண்ணெய்த் துணி சுற்றியிருக்காவிட்டால் பூனையின் காலில் தீப்பிடித்திருக்காது. ஆகவே யாரும் யாருக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை'' என்று தீர்ப்பளித்தார்.

**II. இனி கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளி.**

*1. இப்பகுதியில் சில ஊர்களின் பெயர்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் முழுப்பெயரையும் எழுது.*

*2. ஒரே சொல் இரண்டு முறை வந்துள்ளது. அந்தச் சொல்லைக் கண்டுபிடி.*

*3. நீதிபதியின் தீர்ப்பு உனக்குச் சரி என்று தோன்றுகிறதா?*

## பால் பண்ணைக்குப் போகலாமா

வீணாவும் சுதர்சனாவும் தோழிகள். அவர்களது விடுமுறை நாளொன்றில், அருகிலுள்ள பால் பண்ணைக்கு விஜயம் செய்கின்றனர்.

**சுதர்சனா** : நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பாலை நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் பாதுகாக்கவும், கிருமிகளை அழிக்கவும் கொதிக்க வைப்பார்கள் என்று.

**பாலன்** : முற்றிலும் சரி! முதலில் வாடிக்கையாளர் தரும் பாலில் இருந்து கொழுப்புச்சத்தை நீக்கி விட்டுத் தேவையான அளவு மட்டுமே சேர்ப்பர். பிறகு கொதிக்க வைத்துக் குளிர வைப்பர். இதனால் கிருமிகள் முற்றிலுமாக அழிந்துவிடும்.


**விணா** : சரி! எவ்வாறு பால் உறைகளில் அடைக்கப் படுகிறது?

**பாலன்** : பால் குளிரவைக்கப்பட்ட கலன்களிலிருந்து குழாய் வழியாக பால் நிரப்பும் இயந்திரத்தை அடைகிறது. அங்கு பால் உறைகள் வரும் காகிதங்கள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். இயந்திரமே காகிதத்தை உறையாக்கி, பாலை



அதில் விட்டு மேலே கெட்டியாக 'சீல்' வைக்கும். பிறகு பால் நிரப்பப்பட்ட உறைகள் கன்வேயர் பெல்ட் மூலம் பயணப்படும். அருகில் பணியாளர் கள் நின்று சந்தேகத்திற்கு இடமான உறைகளை எடுத்து விடுவர். பிறகு பால் டிரேகளில் அடுக்கப் பட்டு பால் வண்டிகளை அடையும்.

வீணா : பால் வண்டிகள்தான் பாலை அந்தந்த பகுதி மக்களுக்கு எடுத்துச் செல்லுகின்றன. இல்லையா!



பாலன் : மிகச்சரியாகச் சொல்லி விட்டாய் வீணா! நேரம் ஆகிறது! நான் சென்று மாலைக்கான பால் வினியோகத்தைப் பார்த்துவருகிறேன். வரட்டுமா?

சுதர்சனா : பால் எவ்வாறு உறைகளில் நம்மை வந்து அடைகிறது என்பதை விளக்கினீர்கள். மிகவும் நன்றி ஐயா! சென்று வாருங்கள்.

வீணா : ஆமாம் சுதர்சனா! பாலோடு தொடர்புடைய பிற பொருள்கள் என்னென்ன?

சுதர்சனா : பாலாடைக்கட்டி, சுவையூட்டப்பட்ட பால், வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம், தயிர், பால்பவுடர் போன்றவற்றையும் நாம் பெறுகிறோம்.

வீணா : ஆஹா! எத்தனை சுவையான அனுபவம்! போகலாம் வா! நம் நண்பர்களோடு மீண்டும் இங்கு இன்னொரு முறை வரலாம்.

**III. இதேபோன்ற கலந்துரையாடல்களை உன் ஆசிரியர் வழிநடத்த வகுப்பில் பேசிப் பழகு.**

# 14

*பணகேசரி*



ராஜபுரியின் மன்னன் மிகவும் பணத்தாசை கொண்டவன். அழகேசரி என்ற தன் பெயரைக்கூடப் பணகேசரி என்று மாற்றிக் கொண்டான். மக்கள் அவனை பணப்பிசாசு என்றே அழைத்தனர். 'பிசாசு' என்ற சொல் மறைமுகமாக மன்னனையே அந்த நாட்டில் குறித்தது. பலவிதத்திலும் வரி வாங்கிக் கருவூலத்தை நிரப்பிய மன்னன் புதியதாக என்ன வரிபோடலாம் என்று நினைத்தான். அதன்படி ''சிறுநீர்'' கழிப்பதற்கு வரி போடத் தீர்மானித்தான்! இளவரசன் ரத்தினகேசரிக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. தந்தையிடம் மன்றாடினான்.

தந்தை அவனைக் கருவூலத்திற்கு அழைத்துச் சென்றான்! குவிந்த பொன் நாணயங்களை முகர்ந்து பார்க்கச் சொன்னான். இந்தப் புது வரியினால் வாங்கப்பட்ட பணம் இது! பணத்திற்கு துர்நாற்றம் ஏது? எனவே 'நிச்சயம் இந்த வரியை அகற்ற மாட்டேன்' என்றான். கொடுங்கோலான மன்னனும் ஒருநாள் இறைவனடிசேர்ந்தான்.

மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! ரத்தினகேசரி தந்தையைப் போல் அல்லாது நல்லவனாய் ஆட்சிசெய்தான்.

**I. *மேலே பணகேசரியைப் பற்றிப் படித்தாயா? இனி கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.***

1. இப்பகுதியில் பொதுவான இடத்தில் கூறமுடியாத சொல் வேறொரு சொல்லாக மாறி வந்துள்ளது. அந்தச் சொல் எது?

| | |
|---|---|
| ______________________ | இடக்கரடக்கல் (தகுதி வழக்கு) |

2. அமங்கலமான சொல் வேறொரு சொல்லாகி, மங்கலமான சொல்லாக வந்துள்ளது. அது என்ன?

| | |
|---|---|
| ______________________ | மங்கலம் (தகுதி வழக்கு) |

3. ஒரு கூட்டத்தினர் தங்களுக்கு மட்டுமே புரியும் வண்ணம் கூறும் சொல்லைக் கண்டுபிடி.

| | |
|---|---|
| ______________________ | குழூஉக்குறி (தகுதி வழக்கு) |




## மெல்வில் டூயி

தீபக் நூலகத்திற்குச் சென்றான். காந்தி நூலகம் மிகவும் புகழ்பெற்ற ஒன்று. அடிக்கடி அங்கு செல்லும் தீபக் முதல் நாள் தேர்வுக்குப் படித்ததனால் மிகவும் களைத்திருந்தான். புத்தகத்தின் மீதே தலையைச் சாய்த்து உறங்கிவிட்டான்.

''தீபக்! தீபக்!'' என்று காதருகில் யாரோ அழைத்தது கேட்டது,''தீபக்! நான்தான் புத்தகம் பேசுகிறேன்'' என்றது அந்தக் குரல். தீபக், ''என்ன புத்தகமா? நூலகத்தில் நீ எங்கிருக்கிறாய்'' என்று கேட்டான். ''உனக்கு என் அடையாளத்தைத் தருகிறேன். இந்த அடையாளத்தை வைத்து என்னை எளிதாக் கண்டுபிடித்து விடலாம்'' என்றது புத்தகம். ''அது என்ன அடையாளம்?'' என்றான் தீபக். ''உனக்கு டூயியைத் தெரியுமா?'' என்று கேட்டது புத்தகம். தீபக்குக்குத் தெரியவில்லை. புத்தகம் விவரிக்கத் தொடங்கியது:

'டூயிதான் நூலகத் துறையின் முன்னோடி. அவருக்கு முன்னால் நூலகப் புத்தகங்கள் எப்படிஎப்படியோ அடுக்கி




வைக்கப்பட்டு எடுத்து படிக்க மிகவும் சிரமமானதாக இருந்தன. டூயி நூலகத்தில் உள்ள நூல்கள் மக்களுக்குப் பயன்பட வேண்டும்; பொருள்வாரியாகப் பிரித்து வைக்கப்பட வேண்டும்; அதற்கு புதிய பகுப்பு முறை வேண்டும் என்று நினைத்தார். மேலும் நாள்தோறும் புதிய புதிய புத்தகங்கள் பெருகிக் கொண்டு வரும்போது அந்தப் புத்தகங்களைச் சேர்த்துக் கொள்ள வசதியாக இந்த பகுப்பு முறை இருக்க வேண்டும் என்று கருதினார்.

1876-ல் புதிய பகுப்பு முறை உருவானது. இன்றைக்கு இந்த நூலகத்தில் நூலகர் நீ புத்தகம் கேட்டவுடன் அட்டைகளில் நூலின் அடையாளத்தைத் தேடினார் அல்லவா? நூலகங்களில் அத்தகைய அட்டைகளைக் கொண்டு வந்தவர் டூயி. மேலும் நூலகருக்கான பயிற்சியும் இவரால் தொடங்கப்பட்டதுதான். இந்தியாவில் நூலகத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்த பார்டன், டூயியின் மாணவர் தான்.'

''உள்ளே பார்! புத்தகங்கள் பொருள் அடிப்படையில் எவ்வாறு பிரிக்கப்பட்டு உள்ளன. இலக்கியம், அரசியல், பொருளாதாரம், அறிவியல் (பொது), உயிரியல், வேதியல் என்று... அதோ! நூலகர் வருகிறார். நூலகத்தில் பேசுவது அவருக்குப் பிடிக்காது. போய்வருகிறேன். பிறகு சந்திப்போம்!'' என்று கூறிவிட்டுப் புத்தகம் மறைந்து விட்டது. தீபக் விழித்துப் பார்த்தான். நூலகர் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து மெல்ல எழுந்து நடந்தான்.

***II. மேலே நூலகம் தன் வரலாறு கூறியதைப் படித்தாய் அல்லவா? இது போன்று தன்வரலாற்றுக் கட்டுரைகளை உன் ஆசிரியர் உதவியுடன் எழுதிப் பழகு. தமிழ்க் கலைக்களஞ்சியத்தைப் படித்து மேலும் விபரங்களை அறிந்துகொள்.***

# 15



## குதிரைக்குப் போட்ட தூண்டில்



பரமார்த்த குரு தன் சீடர்களான மட்டி, மடையன், மூடன், முட்டாள், பேதை ஆகியவர்களோடு நெடும் பயணத்தை மேற்கொண்டார். களைப்பின் மிகுதியால் ஒரு ஏரியின் கரையில் ஆறுபேரும் அமர்ந்தனர். கரையில் மேய்ந்து கொண்டிருந்த குதிரையின் நிழல் ஏரியில் விழுந்தது. அதை உண்மைக்குதிரை என்று எல்லோரும் நினைத்தனர். அதை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று நினைத்தனர். ''கொள்ளைக் கொடுத்தால் பிடிக்கலாம்'' என்றான் முட்டாள். ''புல்லைப் பறித்துத் தண்ணீர் மேல் காட்டலாம். குதிரை எழுந்து வரும்'' என்றான் மட்டி. ''எருமை மாட்டை ஏரிக்குள் இறக்கி விட்டால் ஏரி கலங்கிப் போகும். தொல்லை தாங்க முடியாத குதிரை வெளியே ஓடிவரும்'' என்றான் மூடன். குருவோ, ''தூண்டில் போட்டு குதிரையைப் பிடித்து விடலாம்'' என்றார்.

அரிவாளைத் தூண்டில் முள்ளாகவும், தலைப்பாகைத் துணியை தூண்டில் கயிறாகவும் ஆக்கினர். குருவின் ஊன்றுகோல் தூண்டிற்கோல் ஆனது. இரை வேண்டுமே? கட்டுச் சோறு இரையானது.

கட்டுச்சோற்றை மீன்கள் தின்னத் தொடங்கின. அந்தச் சலசலப்பைக் கேட்டு குதிரைதான் தூண்டிலில் மாட்டிக் கொண்டது என்று தூண்டிலை மேலே இழுத்தனர். அரிவாள் கோரைப் புல்லில் சிக்கியது. தலைப்பாகை அறுந்து அனைவரும் தரையில் விழுந்தனர். ''குதிரை முரட்டுக் குதிரை'' என்றார் குரு. ''நல்லவேளை ஏரி நீரில் விழாமல் பிழைத்தோமே'' என்று கூறி மகிழ்ந்தனர் சீடர்கள்.

அ. மேலேயுள்ள கதையைப் படித்தாயா? இனி கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. மேற்கண்ட பகுதியில் பண்பைக் குறிக்கும் சொல்லோடு 'ஆன' என்ற உருபு இல்லாமல் வரும் தொகைச் சொற்களை எழுது.

**உதாரணம்**

*தண்ணீர் = தண்மை + நீர்*

★ *தண்ணீ – தற்கால வழக்கில் ஒரு சொல்.*

பண்புத் தொகை

1. ______________________

2. ______________________

3. ______________________

2. 'உம்' எனும் உருபு இல்லாமலே வரும் தொகைச் சொற்கள் ஏதேனும் இருந்தால் எடுத்தெழுது.

**உதாரணம்**

*நீரும் நிலமும் = இதை 'உம்' மறைவதுபோல் எழுதினால் 'நீர் நிலம்' என்றாகும்.*




உம்மைத் தொகை

3. வேற்றுமை உருபுகள் மறைந்து வந்துள்ள தொகைச் சொற்களை எழுது.

**உதாரணம்**

*ஏரி நீர் = ஏரியின் நீர்*



வேற்றுமைத் தொகை

4. காலத்தைக் காட்டாமல் பெயரடையாக வரும் வினைச் சொற்களைக் கொண்ட தொகைச் சொற்களை எழுது.

**உதாரணம்**

*அரிவாள்*



**ஆ. பின்வரும் சொற்கள் எந்தவகைத் தொகைச் சொற்கள் என்பதை எதிரிலுள்ள பெட்டியில் எழுது.**

1. கருங்குதிரை
2. காய்கனி
3. இரவு பகல்
4. மரக்கிளை
5. புலிவீரன்
6. கண்மை
7. நல்ல நேரம்
8. எழுதுகோல்
9. செந்நாய்
10. ரோஜா மேனி
11. கால்கை
12. அடிஉதை
13. வீரவாஞ்சி
14. அரசகிரீடம்

# 16

## இம்மான்! பொன்மான்!



நரியும் கழுதையும் இணைபிரியாத நண்பர்கள். அவை காட்டில் நடந்து கொண்டிருந்தபோது சிங்கத்தை வழியில் கண்டன. நரி, ''சிங்கராஜா! சிங்கராஜா!'' என்று கூப்பிட்டது. மூன்றும் மகிழ்ச்சியுடன் பேசியபடி 'சல சல' வென ஓடிக்கொண்டிருந்த ஆற்றுப்பக்கம் வந்தன. தூரத்தில் ஒரு மான் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்ததைக் கண்ட சிங்கம் பாய்ந்து அதை வீழ்த்தியது. 'வெடவெட' என நடுங்கிய கழுதையைப் பார்த்து மூவருக்குமாக பங்குபோடச் சொன்னது. உடனே கழுதையும் மானை மூன்று பங்காக சமமாகப் பங்கிட்டது. தன்பங்கிற்கு மிகக் கொஞ்சமே பெற்ற சிங்கம், ''கழுதையாரே! கழுதையாரே! பங்கு சரியா?'' என்றது. கழுதையும் ''மிகச்சரி! மிகச்சரி!'' என்று கூற சிங்கம் வெகுண்டு கழுதையைக் கொன்றது.

'வெலவெல'த்துப் போன நரி இப்போது பங்கு போட வேண்டும்! ''ஆஹா! இம்மான்! பொன்மான்! பங்கிடுவேன்'' என்று முக்கால் பாகம் சிங்கத்திற்கும் கால் பாகம் தனக்குமாகப் பங்கிட்டது. சிங்கம் மகிழ்ந்து கர்ஜித்தது. 'வளவள' எனப் பேசிக் கொண்டு இந்த கிளிப்பிள்ளையும், 'சரசர' என ஊர்ந்த பாம்பும் கூட இந்த கர்ஜனையில் அமைதியாயின. சிங்கம், ''நரியாரே? மிகச்சரியாக பங்கு பிரித்துள்ளீரே! இதை உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது யார்?'' என்று வினவியது. ''வேறு யாருமில்லை. நம் நண்பர் கழுதைதான்'' என்று அடக்கமாகப் பதில் கூறியது நரி.

**I. கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.**

**அ. மேலே கண்ட பகுதியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுது.**

1. ............................ 2. ....................................

3. ............................ 4. ....................................

**ஆ. இரட்டைக் கிளவிகளை எடுத்து எழுது.**

1. ............................ 2. ....................................

3. ............................ 4. ....................................

5. ............................

**இ. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுது.**

1. இணைபிரியாத ....................................
2. ஆற்றுப்பக்கம் ....................................
3. சமமாக ....................................
4. இம்மான் ....................................
5. யாருமில்லை ....................................

**ஈ. சேர்த்து எழுது.**

1. வாழை + இலை ....................................
2. பொன் + தேர் ....................................
3. நல்ல + நாள் ....................................
4. மரம்+ கிளை ....................................
5. அரசு + ஆணை ....................................

## கிளிப்பிள்ளை

கீழேயுள்ள உதாரணத்தைப் பார்.


**உதாரணம்**



கிளி + பிள்ளை
கிளி = நிலைமொழி
பிள்ளை = வருமொழி
கிளிப்பிள்ளை = புணர்ச்சி

| புணர்ச்சியில் மாறியதா? | | | |
|---|---|---|---|
| ஆம் | ✓ | | இல்லை |

**II. மேற்குறிப்பிட்டதுபோல் பின்வரும் சொற்களை எழுது. சரியான குறியை ☑ இடு.**



| | புணர்ச்சியின்போது மாறுதல் ஏற்பட்டதா? |
|---|---|
| 1. குருவி + கூடு | ஆம் ☐ ☐ இல்லை |
| 2. தொலைகாட்சி + பெட்டி | ஆம் ☐ ☐ இல்லை |
| 3. மரம் + தூண் | ஆம் ☐ ☐ இல்லை |
| 4. மணல் + மேடு | ஆம் ☐ ☐ இல்லை |
| 5. வெள்ளை + மனம் | ஆம் ☐ ☐ இல்லை |

**III. புணர்ச்சியின் போது மாறுதல் அடையாத இயல்புப் புணர்ச்சிச் சொற்களை உன் பயிற்சிப் புத்தகத்தில் எடுத்தெழுது.**

1. நரம்பு + தளர்ச்சி = ......................................
2. மிளகு + ரசம் = ......................................
3. கால் + ஆண்டு = ......................................
4. தங்கம் + சங்கிலி = ......................................
5. புளி + பழம் = ......................................

# 17

## ராஜாவும் நூறு ரூபாயும்

**I. பின்வரும் பத்தியைப் படி. சில சொற்கள் தவறாகக் காணப்படுகின்றன. நீ பிழை திருத்தி உன் பயிற்சிப் புத்தகத்தில் எழுது.**



ராஜாவிடம் ரப்பர் இல்லை. எனவே ''அம்மா! அம்மா! பணம் தா! நான் ரப்பர் வாங்க வேண்டும்'' என்றான். அம்மாவிடம் ரூ. 100/- இருந்தன. எனவே நூறு ரூபாய் நோட்டை அம்மா கொடுத்தார். கடைக்காரிடம் நூறு ரூபாய்க்குச் சில்லரை இருந்தன. ஆனால் ராஜாவிடம் கொடுத்து மனம் வரவில்லை! எனவே, ''ராஜா நீ நல்ல பையன்! எனவே ரப்பரை உனக்குத் தருகிறேன். பணத்தை நான் அம்மாவிடம் வாங்கிக் கொள்கிறேன்,'' என்று ரப்பரைக் கொடுத்தார்!






பள்ளிக்குச் செல்லும் வழியில் சைக்கிள் காத்து இரங்கிவிட்டது. அங்கும் பணம் வாங்காமலேயே காற்றடித்தாகி விட்டது. பள்ளி வந்தது! நேரம் கழித்து வந்ததால் ரூபாய் ஐந்து அபராதம். ராஜாவின் சைக்கிளைப் பார்த்து நடந்ததை, அறிந்த தலைமை ஆசிரியர் அபராதம் விதிக்க வில்லை! நூறு ரூபாயை ராஜா இன்னமும் மாற்ற வில்லை!



## சேமிப்பே சிறந்த பாதுகாப்பு


**II. இங்கு ஒரு வங்கியின் இயக்கம் படமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உன் ஆசிரியர் உதவியுடன் விடையளி.**




1. வங்கியில் எவ்வாறு பணம் செலுத்தப்படுகிறது?
2. வங்கியிலிருந்து பணம் பெறுவது எப்படி?
3. நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைக்குமிடத்தின் பெயர் என்ன?
4. உனக்கு சிறுசேமிப்பில் ஆர்வம் இருக்கிறதா?
5. சேமிக்கும் முறைகள் யாவை?
6. சிக்கனம் மற்றும் சேமிப்பு குறித்து வழங்கிவரும் பழமொழிகள் யாவை?
7. நீ எந்த வழிகளில் பணத்தைச் சேமிக்கிறாய்?

## சாலைக் குறியீடுகள்

III. ராகுல் தன் சைக்கிளில் கிளம்பிவிட்டான். அவன் வழியில் என்னென்ன சாலைக் குறியீடுகளைக் காண்கிறான் என்பதை எண்கள் குறிப்பிடும் காலி இடங்களில் அடையாளப்படுத்து. உனக்குத் தெரிந்த சாலைக் குறியீடுகளையும் எடுத்தெழுது. ஆசிரியர் உனக்கு உதவுவார்.



# 18

## திருப்புத் தேர்வு

**அ. 1. உடன்பாட்டுச் சொற்றொடராக்கு.**

ஒருவர் செய்யும் நன்மையை
மறப்பது நன்று அன்று.

**2. எதிர்மறையாக்கு.**

தீதும் நன்றும் நமக்கு
நாமே ஏற்படுத்திக் கொள்வன.

**3. உணர்ச்சிச் சொற்றொடராக்கு.**

தியாகமும், அன்பும் முகத்திற்கு
அழகைத் தருகின்றன.

**4. வினாச் சொற்றொடராக்கு.**

அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை.

**5. செய்திச் சொற்றொடராக்கு.**

''ஆஹா! ஜான்சி ராணியின் வாள் சுழன்ற
இடமெல்லாம் மின்னல்! மின்னல்!
என்னே அவள் வீரம்!
என்னே அவள் நாட்டுப்பற்று!''

**6. இந்தப் பதிலுக்குக் கேட்கப்படும் வினா என்ன?**

திருவள்ளுவர் மயிலையில் வாழ்ந்ததாக
ஒரு கருத்து உண்டு.

**7. இந்தப் பதிலுக்குக் கேட்கப்படும் ஒரே வினா என்ன?**

''தமிழ் தாயை வணங்குவேன்!
பெற்ற அன்னையை வணங்குவேன்!
உற்ற தெய்வத்தை வணங்குவேன்!''

**8. பிழை நீக்கி எழுது.**

தமிழ்பண் இசைத்தனர் மகளிர்!
விழா களை புகுந்தது அங்கே!
தங்கத்தேர் வந்தது, கன்னி தமிழை கண்டது
போல் மகிழ்ந்தோம்.

**9. இலக்கணக் குறிப்பு எழுது.**

அ. செவ்வாழை ..................................

ஆ. வாழைமரம் ..................................

இ. மர வேர் ..................................

ஈ. வேர்ப் பலா ..................................

உ. பலா வாழை ..................................

ஊ. வாழைக் கன்று ..................................

எ. பவள வாய் ..................................

ஏ. ஓடு நாய் ..................................

**ஆ. புணர்ச்சி விதி கூறு.**

1. வாழை + இலை .................

2. திரு + மூர்த்தி .................

3. திரு + ஆரூர் .................

4. கிழக்கு + நாடு ...........

5. புளி + கொம்பு ...........

6. பூ + தொட்டி ............

# 19

## யாப்பு - அணி

**தெரிந்து கொள்:**

யாப்பு

எழுத்து அசை சீர் தளை அடி தொடை

பாக்கள்

வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா

அணி = அழகு

**அணிகளுள் சில :**

1. உவமை அணி :-

'போல' என்ற உவம உருபு இடம் பெறும்.

பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறு

2. எடுத்துக்காட்டு உவமையணி:-

உவம உருபு 'போல' மறைந்து வரல்.

வெள்ளத்தனைய மலர் நீட்டம் - மாந்தர்
உள்ளத்தனையது உயர்வு

3. உருவக அணி:-

உவமையும் பொருளையும் ஒன்றுபடுத்திக்கூறுவது.

| உவமை | உருவகம் |
| --- | --- |
| தாமரை | கரத்தாமரை |
| மலர் முகம் | முகமலர் |
| தாமரைப் பாதம் | பாதத்தாமரை |
| சந்திர முகம் | முகச்சந்திரன் |
| வாள் விழி | விழிவாள் |

4. ஏகதேச உருவக அணி:-

ஒன்றை உருவகம் செய்து மற்றதை உருவகப்படுத்தாமல் விடுதல்.

ஊழி பெயரினும் தான் பெயராச் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவம்.

5. இயல்பு நவிற்சி அணி :-

உள்ளதை உள்ளபடியே கூறுவது.

''எல்லாம் நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீடை இருண்ட வீடு என்க.''

6. உயர்வு நவிற்சி அணி :-

தன் கருத்தை மிக உயர்வாகக் கூறல்.

''மாலைவாய் உடுத்த தேனும்
வரம்பு இகந்து ஓடி.''

7. தற்குறிப்பு ஏற்ற அணி :-

கோவலன் மதுரை நுழைந்த போது மதில் கொடிகள்,

''வாரல் என்பனபோல் கைமறித்துக்காட்ட''

8. சொல் பொருள் பின்வரு நிலை அணி :-

| |
|---|
| முன்னர் வந்தசொல் பலமுறை வந்து ஒரே பொருளைத் தருவது. |

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

9. மடக்கணி :-

| |
|---|
| வந்த சொல் மீண்டும் வந்து வேறு ஒரு பொருளைத் தருவது. |

''வம்பிறைக்கும்''
அம்பு + இறைக்கும்
அம் + பிறைக்கும்

**நிரப்பு.**

*1. உள்ளதை உள்ளவாறே கூறும் அணி __________________.*

*2. உள்ளதை உயர்த்திக் கூறும் அணி __________________.*

*3. உவம உருபு மறைந்து உவமையும் பொருளும் வருவது __________________.*

*4. உவம உருபு வெளிப்பட்டு வரும் அணி __________________.*

151

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

நூலகம்

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் அல்லது அதற்குமுன்னர் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குள் ஒப்படைக்காத புத்தகத்திற்கு நாளொன்றிற்கு 2ரூபா வீதம் அறவிடப்படும்.

-ஆசிரிய நூலகர்-

02.11.10 - 107

DONATED ... B FUNDED
SECONDARY EDU... LOPMENT PROJECT
MINISTRY OF ... HER EDUCATION

DONAT... FUNDED
...NDARY EDU... LOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION



இப்புத்தக வரிசை ஆங்கிலத்தைப் பயிற்றுமொழி யாகவும் தமிழை இரண்டாவது மொழியாகவும் கொண்டுள்ள மெட்ரிக்குலேஷன், சி.பி.எஸ்.இ. மற்றும் ஐ.சி.எஸ்.இ. பாடத்திட்டப் பள்ளிகளுக்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் தற்காலத் தமிழ் மொழி பயிலும் ஆர்வத்துக்கு இப்புத்தகங்கள் வழிகாட்டிகள்.

தொடக்கநிலை மொழி பயிலுவோரின் தேவைகளான தடையற்ற படிக்குமாற்றலை வளர்த்து, எழுதுவதற்கும் பேசுவதற்குமான பயிற்சிகளை அளிப்பது வளர்தமிழின் நோக்கம்.

ஓரியன்ட் லாங்மன்

VALARTAMIL 8: TAMIL LANGUAGE PRACTICE
ONWARD TAMIL 8
ISBN 81 250 0835 7



Orient Longman
Rs 26-00